பெப்ரவரி 2011

விலை: 40/-



உதைபந்தால் உயர்ந்த யாழ்ப்பாணம்



வடமராட்சியின் வர்த்தக நகர்

# சிகரம் தொடு

இளையோர் மாதாந்தம்

சிகரம்:2 அடி:5 சிகரம் ஊடக இல்ல மாணவர் வெளியீடு ISSN 2012 -7928



## கலக்கும் கல்லூரிகள்

வடக்கு – கிழக்கில் முதன்முறையாக NORITSU QSS-37 HD (HIGH DEFINITION) 640 DPI இயந்திரத்தை அறிமுகப்படுத்திய

# பிரியங்கா

PRIYANKA Digital Colour Lab

டிஜிற்றல் கலர் லாப், புகைப்பட கலையகம்



- 3R - 12 X 36 வரையிலான பட பிரதியாக்கம்
- 5 நிமிடத்தில் அடையாள அட்டைப் படங்கள்
- கணினி மூலம் போட்டோ - வீடியோ எடிற்றிங்
- நவீன முறையில் அல்பம் கட்டுதல், லெமனேற் செய்தல்
- மற்றும் பனர் பிறின்ற், ஸ்ரிக்கர் பிறின்ற்

ஆகியவற்றை சிறந்த முறையில் குறித்த துவணையில் செய்து கொள்ள நாடுங்கள்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொ.பே.இல.: 021 2262737

வடமராட்சியில் பஜாஜ் வாகனங்களுக்கான டேவிட் பீரிஸ் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்




# அபி மோட்டோர்ஸ்
# ABI MOTORS

BAJAJ



எந்த வகையான பாதைகளையும் சமாளித்து இயல்பான - இலகுவான - சௌகரியமான பயணத்துக்கு உங்களுக்கான உண்மையான அந்தஸ்து

## பஜாஜ் மோட்டார் வாகனங்கள்

மிகக் குறைந்த விலையில் - தவணைக் கொடுப்பனவில் பெறுக்கொள்ளலாம்

இல. 210, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி.

தொ.பே.இல.: 021 2262757 / 0772487640

நேற்றைய அனுபவங்களிலிருந்து
நாளைய சாதனைகளை நோக்கி

# சிகரம் தொடு
SIKARAM THODU

சிகரம் 2 அடி 5

சிகரம் ஊடக இல்லம்
மாணவர் வெளியீடு

**தொகுப்பு**
கோ.றுஷாங்கன்

**இணைத் தொகுப்பு**
ம.யசோநிதி

**வடிவமைப்பு**
அல்பேர்ட் பெஸ்ரியன்

**ஆக்கங்கள்**
ச.சிந்து
ம.யசோநிதி
சி.ஜெயந்தி
இ.பானுஷன்
க.கஜேந்தினி
த.சுமித்தி
நா.சாந்தருபன்
சு.நேதாஜி
ந.சதீஸ்
க.கோபி
ஞா.கிரிஷாந்
அ.பெஸ்ரியன்
ஜெ.பாலகுமார்
அ.அசோபனா
ச.தர்ஷா
மா.சுரேஷ்

**அச்சாக்கம்:**
கரிகணன் பிறின்டேர்ஸ்

**சந்தா விபரம்**
ஆண்டு சந்தா: 600 ரூபா
2 ஆண்டு சந்தா: 1,000 ரூபா
மாணவர்களுக்கும், கல்வி
நிறுவனங்களுக்கும்
ஆண்டு சந்தா: 500 ரூபா




அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**சிகரம் ஊடக இல்லம்**
இல.221, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி : 077 77 33 931
மின்னஞ்சல்:
sikaramthodu@gmail.com


# உள்ளே...


04 JAFFNA TRADE FAIR வர்த்தக - கைத்தொழில் கண்காட்சி



10 தேசியவிருது வென்ற கண்டல்



32 கைகளால் வினைகள் செய்தார்

35 ஹாய் சொல்லும் ஹைக்கூ!



40 உறவுகளுக்காய் ஏங்கும் விழிகள்!




38 அச்சம் பயம் தவிர்


## இன்னும்....



யாழ்ப்பாணத்தில் அமெரிக்க தகவல்கூடம்.......................09
நம்மூர் சச்சின் எடின்.......................13
ஆயிரம் வாசல்.......................14
சிகரம் ஊடக இல்லத்தினருக்கு ஒரு மடல்.......................18
வாசிப்பால் உயர்வோம்.......................31
இல்லாத பணத்தில்.......................37
மருந்தில்லா மருத்துவம்.......................42
கடல் வளம் எதிர்நோக்கும் சவால்கள்.......................44
முகம் பொலிவு பெற.......................48



கணனி-ம்



**இணையத்தில் ஒரு ஹாட்டிஸ்க்**
**HTML 5**
**Microsoft Word**
**Adobe Photoshop**
**Basic Computer Technology**
**புதுவரவு**



## பருவத்தே...

பாதைகள் திறக்கின்றன.

புது வாசல்கள் திறக்கின்றன.

வாய்ப்புக்கள் பெருகுகின்றன.

எல்லாவற்றையும் கைப்பற்றத் தயார் என இளைஞர்களும் தயாராகிவிட்டார்கள்.

இதுதான் ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் அவசியமான சூழல்.

தென்னிலங்கையிலிருந்தும், கடல் கடந்த தேசங்களிலிருந்தும் வர்த்தகர்கள் படையெடுக்கிறார்கள்.

புதுத் தொழில் முயற்சிகளும், தொழில்நுட்பங்களும், முதலீட்டு வாய்ப்புக்களும் அறிமுகமாகின்றன.

கூடவே, உலகு பரந்த நவீன கல்வி வளர்ச்சிகளை நம் வாசலுக்கே கொண்டுவர ஏராளமான கல்வி நிறுவனங்களும் இரு கரம் நீட்டி அழைக்கின்றன.

எல்லா வாய்ப்புக்களையும் கையகப்படுத்தத் தயாராக நம்மவர்களும் உசாரடைந்துள்ளனர்.

தேசிய விருதுகள், சம்பியன் கிண்ணங்கள் என்று புதுவேகத்துடன் புறப்பட்டுள்ளார்கள்.

இந்த வீச்சும், வேகமும், விவேகமாக முன்னகருமானால், முப்பது வருட அழிவுகளைச் சீர்செய்ய மூன்றே வருடங்கள் போதும்.

எல்லாம் சரிவரட்டும் என்று காத்திருக்க இது நேரமில்லை.

எங்கும், எப்போதும் அப்படி நடந்ததுமில்லை.

கிடைத்தவற்றைக் கைப்பிடித்து மெல்ல, மெல்ல முன்னகரத் தொடங்கினால்...

இன்னுமின்னும்... இன்னுமின்னும்... முன்னோக்கிப் பாயலாம்.

இழந்தவற்றையெல்லாம் தூக்கி நிறுத்தி, இன்னும் அடையவேண்டியவற்றையும் அடையும் வரையில்

ஒயோம் என்று சபதமெடுப்போம்!

மாணவர்களுடன் இணைந்து


கோ.றுஷாங்கன்



### சிகரம் ஊடக இல்லத்தின் தைப்பொங்கல் விழா

தென்னிலங்கை ஊடகவியலாளர்களின் பங்கேற்புடன் சிகரம் ஊடக இல்ல மாணவர்களின் தைப்பொங்கல் விழா இம்முறை சிறப்பாக நடைபெற்றது.

பாரம்பரிய முறைப்படி மாவிலை, தோரணங்கள் கட்டி, கோலமிட்டு சூரிய பகவானுக்கு வணக்கம் செலுத்திய இந்த நிகழ்வில், தேசிய ஊடகங்களான ரூபவாஹினி (நேத்ரா), சுயாதீன தொலைக்காட்சி (வசந்தம்), இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (தென்றல்) மற்றும் ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரன் ஆகிய ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு, பொங்கல் விழா தொடர்பான செய்திகள், காணொளிகளைச் சேகரித்து தமது ஊடகங்களில் வெளியிட்டனர்.



"சிகரம் தொடு" இதழின் அபிமானிகள், வாசகர்கள், சிகரம் ஊடக இல்ல நண்பர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் பொங்கல் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.



### 'விலங்குப்பண்ணை' வெளியீடும், பதிப்பக முயற்சிகள் பற்றிய கலந்துரையாடலும்!

"விலங்குப் பண்ணை" மொழிபெயர்ப்பு நாவல் வெளியீடும், தமிழில் புதிய பதிப்பக முயற்சிகளை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் சிகரம் ஊடக இல்லத்தில் 16-01-2011 அன்று நடைபெற்றது.

சிகரம் ஊடக இல்லத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த எழுத்தாளர்களான வைத்திய கலாநிதி நோயேல் நடேசன், லெ.முருகபூபதி, பிரித்தானியாவைச் சேர்ந்த எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீட இணைப்பாளர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், கவிஞர் சோ.பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்களான தெணியான், கருணாகரன், விஷ்ணு, சித்தாந்தன், ம.நிலாந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்..




ஜோர்ஜ் ஓவேல் எழுதிய ஆங்கில நாவலான Animal Farm, நல்லைக்குமரன் குமாரசாமியின் மொழிபெயர்ப்-பாக "விலங்குப் பண்ணை" என்ற பெயரில் இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிகரம் ஊடக இல்லத்தின் வெளியீடான இந்த "விலங்குப்பண்ணை" நாவல் பற்றிய அறிமுக உரையை, கவிஞரும், ஆங்கில விரிவுரையாளருமான சோ.பத்மநாதன் நிகழ்த்தினார்.

வைத்திய கலாநிதி நோயேல் நடேசன் வெளியிட்ட வண்ணாத்திக்குளம், சி.கருணாகரனின் கவிதைத் தொகுப்-பான எதுவுமல்ல எதுவும் ஆகிய நூல்களும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

தொடர்ந்து, தமிழில் புதிய பதிப்பு முயற்சிகளை ஊக்குவித்தல் தொடர்பான விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.




### பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகளில் சிகரம்

தென்னாசியாவின் முதலாவது பெண்கள் பாடசாலையான, உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லு-நர் போட்டி 28-01-2011 அன்று நடைபெற்றது.


கல்லூரி அதிபர் ஷிரானி மில்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தின் முதலாவது பெண் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பித்தார்.

மாணவிகளுடைய விறுவிறுப்பான விளையாட்டுக்-களுடன், விநோத உடை மற்றும் நடன நிகழ்வும் இங்கு நடைபெற்றன.



மெய்வல்லுநர் போட்டி தொடர்பான செய்திகளை சிகரம் ஊடக இல்ல மாணவர்கள் போட்டி நடைபெற்ற மைதானத்திலிருந்தே தமது இணைய ஊடகமான www. JaffnaToday.com இல் தரவேற்றம் செய்தனர்.

தொடர்ந்து யாழ்ப்பாணக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, வட்டு.மத்திய கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிகளிலும் விளையாட்டு நிகழ்வுகளை சிகரம் ஊடக இல்ல மாணவர்கள் மைதானத்திலிருந்தே இணையத் தரவேற்றம் செய்தனர்.



### லண்டன் பி.பி.சி. ஊடகவியலாளருடன் வீடியோ கலந்துரையாடல்

பி.பி.சி உலக சேவையின் ஊடகவியலாளர் சீவகனுட-னான வீடியோக் கலந்து-ரையாடல் 30.01.2011 அன்று சிகரம் ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

சிகரம் ஊடக இல்லத்தின் பணிப்பாளர் கோ. றுஷா-ங்கன், பி.பி.சியின் ஊடகவியலாளர் சீவகனை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, சிகரம் ஊடக இல்லத்தின் 2 ஆம் அணி மாணவர்கள் ஊடகத்துறை சம்பந்தமான சந்தேகங்களையும், கேள்விகளையும் அவரிடம் கேட்டுத் தெளிவுபெற்றனர்.

வீரகேசரி பத்திரிகையில் தமது ஊடகப் பணியை ஆரம்பித்து, சுமார் 10 வருடங்களுக்கு மேலாக பி.பி.சி. தமிழோசையில் கடமையாற்றி வரும் சீவகன், ஊடக அனுபவங்களை அடிப்படையா-கக் கொண்டு ஊடகத்துறை தொடர்பான மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார்.



யாழ் மண்ணிலிருந்து

உலகெங்கிலுமுள்ள தமிழர்களுக்காய்

தரமான செய்திகள், பார்வைகளைத் தாங்கி

JAFFNA TODAY

Northern SriLanka News & Views

www.JaffnaToday.com

# JAFFNA
## பல வாசல்களைத் திறந்துவிட்ட
# TRADE FAIR
# வர்த்தக - கைத்தொழில் கண்காட்சி

யாழ்ப்பாணம் முன்பு எப்படியிருந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? 1980களுக்குப் பின்னர் பிறந்திருக்கக்கூடிய பலருக்கு அன்றைய யாழ்ப்பாணத்தைத் தெரிந்திருக்க நியாயமில்லை.

சுப்பிரமணியம் பூங்காவுக்கு பின்புறமாக பிரமாண்டமாக வீற்றிருந்த நமது மாநகரசபை, இலங்கையின் முக்கிய புகையிரத நிலையங்களில் ஒன்றாக இருந்த யாழ் புகையிரத நிலையம், அசோகா ஹொட்டேல் (இன்று யாழ் பொலிஸ் நிலையம் அமைந்திருக்கும் கட்டடம்), சுபாஸ் ஹொட்டேல் (512வது படையணியின் தலைமையகம் அமைந்துள்ள பகுதியில் உள்ளது), வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சுப்பர் மார்க்கட்... (இப்போது வெறும் காணியாக இருக்கும் இந்த இடத்தில் 'கார்கில்ஸ் ஃபுட் சிற்றி' வரவுள்ளது) என்று யாழ்ப்பாணத்தின் ஏராளமான பெருஞ் சொத்துக்கள் பலவற்றையும் இன்றைய இளைஞர்களில் பலர் கண்டேயிருக்கமாட்டீர்கள்.

கொழும்புக்கு அடுத்ததாக இலங்கையின் மிகப்பெரிய நகரமாக இருந்தது யாழ்ப்பாணமே என்பதும், தலைநகர் கொழும்பு அமைந்துள்ள மேல் மாகாணத்துக்கு அடுத்தபடியாக, இலங்கைப் பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்தது வட மாகாணம்தான் என்பதும் தெரியுமா உங்களுக்கு?

போர் சப்பித் துப்பிய எச்சம்தான் இன்று நாம் காணும் யாழ்ப்பாணம். எனினும், யாழ் பொது நூலகம், சுப்பிரமணியம் பூங்கா என்று இப்போது அது மீண்டும் பொலிவடையத் தொடங்கியிருக்கிறது. போர் ஓய்ந்து யாழ்ப்பாணத்தின் பிரதான நுழைவாயிலான ஏ9 வீதி திறந்தபின், உல்லாசப் பயணிகளின் வருகை, முண்டியடிக்கும் முதலீட்டாளர்கள், கைத்தொழில் பேட்டைகளின் மீள் வரவு, சூடுபிடித்திருக்கும் சிறுவியாபாரம் மற்றும் குடாநாட்டு உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு என யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் மீண்டும் கொழிக்கத் தொடங்கியிருக்கிறது.

துரிதமாக வளர்ந்து வரும் யாழ்ப்பாணத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையில், 2010 ஏப்ரலில் முதல் தடவையாக நடத்தப்பட்ட சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, இவ்வாண்டு ஜனவரி 21-23 வரையில் மிகப் பிரமாண்டமாக சுப்பிரமணியம் பூங்காவுக்கு பின் புறத்தில் உள்ள, முன்பு யாழ் மாநகரசபை அமைந்திருந்த பரந்த நிலப்பரப்பில் நடத்தப்பட்டது.

**"பல வாசல்களுக்கான திறவுகோல்"**

"வியாபாரத்துக்கான திறவுகோல்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட இந்தக் கண்காட்சிக்காக பல இலட்சம் ரூபா செலவில் மாநகரசபை வளாகம் துப்பரவு பண்ணப்பட்டு, பாரிய கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

"கண்காட்சிக்காக இந்தளவு பிரமாண்டமான கூடாரத்தை அமைத்திருப்பது இலங்கை வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவை" என, கண்காட்சி மற்றும் மகாநாடுகள் சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் இம்ரான் ஹசன் கூறினார். இலங்கை இயந்திரவியல் கூட்டுத்தாபனத்தினால் கண்காட்சித் திடலில் அமைக்கப்பட்டிருந்த பாரிய கூடாரம் (Dome) இதை உறுதிப்படுத்தியது.

யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் சங்கமும், வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சி மற்றும் மகாநாடுகள் சேவை அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த



வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, யாழ் இந்தியத்தூதரக தலைமை அதிகாரி வி.மகாலிங்கம், இந்தியத்தூதுவர் அசோக் காந்தா, இந்தோனேசிய தூதுவர் மற்றும் பிரமுகர்கள்




இக்கண்காட்சியில் 250 க்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் கலந்துகொண்டு வட மாகாணப் பொருளாதார மேம்பாட்டுக்கான பல கதவுகளைத் திறந்து காட்டின.




"யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்களது வர்த்தகச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களைக் கண்டறியும் களமாக இந்தக் கண்காட்சி அமையும்'' என, இம்ரான் ஹசன் தனது ஆரம்பவுரையில் கூறியிருந்தார். யாழ்ப்பாண தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து தமது வர்த்தக, கைத்தொழில் நடவடிக்கைகளை விரிவாக்க பல நிறுவனங்கள் தயாராகவிருப்பதாகவும் அவர் அறிவித்தார்.


**"யாழ் – தமிழக கப்பல், விமானப் போக்குவரத்து அடுத்த ஆண்டு ஆரம்பிக்கும்"**

கண்காட்சியை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, "போரினால் சிதைந்திருக்கும் இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் உட்கட்டுமானத்தை மீளவும் கட்டியெழுப்பவும், குறிப்பாக வட பிராந்தியத்தை மீண்டும் வளப்படுத்துவதற்கும் இந்திய அரசாங்கமும், தனியார்துறையும் பங்களிக்கும்'' என்று உறுதியளித்தார்.

காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் என்பவற்றினூடாக யாழ்ப்பாணத்துக்கும், தமிழகத்துக்குமான நேரடி போக்குவரத்துக்கள் அடுத்த ஆண்டே ஆரம்பிக்கும் என்ற இனிப்பான செய்தியை வெளியிட்டு அவர் நம்மை உற்சாகப்படுத்தினார்.

தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு கைத்தொழிலாளர்களுக்கு யாழ்ப்பாணத்துக்கான நுழைவாயிலாகவும், யாழ்ப்பாணத்து தொழில் முயற்சியாளர்களுக்கு வெளிநாட்டு உற்பத்திகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைக் கண்டறியும் அரிய வாய்ப்பாகவும் இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது.

தென்னிலங்கை வர்த்தக, கைத்தொழில் நிறுவனங்களுக்கும் யாழ் குடாநாட்டு விற்பனையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கிடையிலான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் உறவுப் பாலமாகவும் இது அமைந்திருந்தது.



**கண்காட்சி வளாகம்:**


258 காட்சிக்கூடங்கள் நிறுவப்பட்டு, கைத்தொழில் நிறுவனங்களுக்கான



கணினி இயந்திர வழி - எம்ப்பிரோய்டிங்






காட்சி அரங்கம், கல்விக் காட்சி அரங்கம், யாழ் உற்பத்திகளின் காட்சி அரங்கம், இந்திய, கேரள மாநில காட்சி அரங்கம் என, தனித் தனி அரங்கங்களில் பல்வேறு நிறுவனங்கள் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தியிருந்தன.

மக்களை ஈர்க்கும் வகையில் தமது உற்பத்திகள் பற்றிய ஒலி-ஒளி வர்ணனையுடன் பரிசுப்போட்டிகளையும் நடத்தி ஒரு திருவிழா போலவே இந்தக் கண்காட்சியை அவர்கள் நடாத்தியிருந்தனர்.

கண்காட்சித் திடலின் நுழைவாயிலைக் கடந்தவுடனேயே பரந்து விரிந்து கிடந்த விதவிதமான கண்காட்சிக்கூடங்கள் பார்வையாளர்களைக் கூவியழைத்தன. மோட்டார் வாகனங்கள், கட்டட நிர்மாணப் பொருள்கள், விவசாய உற்பத்தி உபகரணங்கள் என ஆரம்பித்து, உணவு உற்பத்தி, உணவு பதனிடல், கட்டுமானப்பணி, பொதிசெய்யும் தொழிற்துறை, மருத்துவம், கைவினைப் பொருள்கள், முக ஒப்பனை, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம், மின்சார இலத்திரனியல் பொருள்கள் என ஏராளமான அம்சங்கள் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன.

கல்விச் சேவைகளை வழங்கும் 12க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்காக தனியே ஒரு அரங்கம்-கூடவே வங்கிகளும் பங்குபற்றி-யிருந்தன.

இறப்பர், பிளாஸ்ரிக் பொருள் உற்பத்தி, விளையாட்டு உபகரணங்கள், சூரியக்கல உற்பத்திகள், தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் விவசாய உற்பத்திப்பொருள்கள் இந்திய அரங்கில் குவிந்திருந்தன.

நாமும் சளைத்தவர்களல்ல என்று நம்மூரின் சங்கமம் உணவு உற்பத்தியாளர், EUT தளபாட உற்பத்தியாளர், பவிசாரு மரக்கன்றுகள், மோட்டார் மற்றும் மின்னுற்பத்தி இயந்திரவியலாளர்கள் பலரும் தம்பங்கை நிறைவு செய்தனர்.

வர்த்தகர்கள், முதலீட்டாளர்களின் தொழிற்திறன்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் தொழில் மற்றும் நிதி வழிகாட்டல் கருத்தரங்குகள் கண்காட்சிக்குச் சமாந்தரமாக யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன. புதிதாகத் தொழில் ஒன்றை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளவர்களுக்கும், தற்போது தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பல்வேறு தொழில் வழிகாட்டல்களுடன், நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வங்கி வழிகாட்டுதல்களும் இக்கருத்தரங்குகளில் வழங்கப்பட்டன.

காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை கண்காட்சி நடைபெற்று முடிய, இரவில் தென்னிலங்கை மற்றும் யாழ் முன்னணி இசைக்குழுக்கள் மக்களைக் களிப்பூட்டின. இவற்றுடன், எலி்.பன்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம், சோடா மற்றும் கீல்ஸ், ராஜா, ரேஸ்ட் ஒ்.ப் ஜ்.ப்னா உணவகங்கள் நாள் முழுவதும் பார்வையாளர்களின் பசியையும், தாகத்தையும் தீர்த்தவண்ணமிருந்தன.


மூப்பு ஒரு தடையில்லை


பொதி செய்யும் இயந்திரம்

மூன்று நாள் திருவிழாவாக கோலாகலமாக நடைபெற்ற இக்கண்காட்சி, யாழ்ப்பாணத்தின் வர்த்தகர்கள், தொழில் முயற்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வைத்தியர்கள், பொலிஸ், இராணுவம், அரசியல் பிரமுகர்கள், நிர்வாக உத்தியோகத்-தர்கள், ஊடகவியலாளர்கள் என அனைவருக்குமே பயன்மிக்க ஏராளமான விடயங்களை வழங்கிச் சென்றது.

நுழைவாயிலில்...



## கண்காட்சி பற்றிய கருத்துக்கள்



*மு.பூரணச்சந்திரன்*
கண்காட்சி ஒழுங்கமைப்பாளர், யாழ். வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கத் தலைவர்

போரினால் நலிவடைந்துபோன எமது கைத்தொழிற்றுறையை மேம்படுத்-துவதனூடாக, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தரும் நோக்கிலேயே இக்கண்காட்சி நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 40,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். 15,000க்கும் மேற்பட்டோர் நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கண்காட்சியைக் கண்டுகளித்-தனர். இன்னும் பெருந்தொகையான ஆசிரியர்கள், மாணவர்கள் இலவசமாகக் அனுமதிக்கப்பட்டனர்.

கண்காட்சியில் கலந்துகொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு கைத்-தொழில் நிறுவனங்களுக்கு, அவற்றின் உற்பத்திகளை விநியோகிக்க யாழ்ப்பாணத்து விற்பனை முகவர்கள் கிடைத்-துள்ளனர். பல நிறுவனங்கள் யாழ் தொழில் முயற்சியாளர்களுடன் உடன்படிக்கைகளையும் செய்துகொண்டுள்ளன. இது யாழ் வர்த்தக, தொழில் முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள பெரும் முன்னேற்றம் மட்டுமன்றி எமது நோக்கமும் நிறை-வேறியுள்ளது.

*U.P.அஷோக்குமார்,*
*வின்சென்ற் சோபனா,*
KCP சோலர் இண்டஸ்ட்ரீஸ், சேலம்



எமது உற்பத்திகளுக்கு இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்-தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் ஆறு முகவர்கள் எமது உற்பத்திகளை விற்பனை செய்ய முன்வந்துள்ளனர். இங்கு ஒரு கிளையை அமைத்து எமது உற்பத்திகளை மக்களிடம் சேர்ப்பதே எமது நோக்கம்.



உங்க எல்லோரையும் பார்க்கும்போது எங்களுக்கு சந்தோசமா இருக்கு. உங்களுக்குத் தேவையான விலையில் எங்க உற்பத்திகளைத் தர நாம் தயாராக உள்ளோம்.

*மல் லியனகே*, பொது முகாமையாளர், மெக்வூட்ஸ் நிறுவனம், கொழும்பு.



இதன் பொது முகாமையா-ளரான 'மல் லியனகே தெரிவித்ததாவது, 170 வருடம் பழமை வாய்ந்த எமது நிறுவனத்தின் சேவைகள் உற்பத்திகளை நாம் இக்கண்காட்சி மூலமாக யாழ்ப்பாண மக்களு-க்கு தெரியப்படுத்தி-யுள்ளோம். கூடவே, யாழ் இளைஞர் யுவதிக-ளுக்கு நாம் உதவிசெய்யக் காத்திருக்கிறோம். முதல் கட்டமாக விரைவில் ஒரு கணினிக் கல்வி நிறுவனத்தை இங்கு ஆரம்பிக்கவுள்ளதுடன், அதிகளவானோருக்கு வேலை-வாய்ப்புக்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

*சி.பாலகுமார்*, பார்வையாளர்

இந்தக் கண்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதுவரை நாம் அறிந்திராத நிறையப் பொருள்களைப்பற்றி அறிந்துகொண்டோம். இப்படியெல்லாம் நவீன உற்பத்திகள் இருக்கின்றன என்பதை அறியும்-போது ஆச்சரியமாக இருக்கிறது. கண்காட்சி ஏற்பாட்டாளர்களுக்கு நிச்சயம் நன்றி சொல்லவேண்டும்.

**- மகா யசோ**

# “நல்ல முயற்சி, நிறுத்திடாதீங்க சார்”

யாழ்ப்பாணத்துக்கு புதிய வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளை அறிமுகம் செய்த சர்வதேச வர்த்தக கண்காட்சியில் சிகரமும் குடை விரித்திருந்தது. கண்காட்சியைக் கண்டு களித்து, விரும்பிய பொருள்களை வாங்கிக்கொண்டு, கண்காட்சித் திடலை விட்டு வெளியேறுவோருக்கு இறுதியாக ஒரு சஞ்சிகைப் பரிசை சிகரம் ஊடக இல்ல மாணவர்கள் வழங்கினார்கள்.

தமது வெளியீடான 'சிகரம் தொடு' இதழ்களை விற்பனை செய்த அவர்கள், முந்திய இதழ்கள் பலவற்றை ஆர்வமிக்க வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கினர்.

சிகரம் ஊடக இல்லத்தின் 2ம் அணி மாணவர்களுடன் இணைந்து முதலாம் அணியினரும் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரையில் கண்காட்சியைக் கண்டுகளித்த அனைவருக்கும் சிகர(ப்) பரிசை சளைக்காமல் வழங்கி வைத்தனர். கண்காட்சிக்கு வந்திருந்த ஏராளமானவர்கள் ஊடக இல்ல மாணவர்களின் 'சிகரக் குடைக்குள்' ஒருக்கால் வந்துபோகத் தவறவில்லை.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் ஓங்காரமூர்த்தி, கிளிநொச்சி பாரதி வித்தியாலய அதிபர் இராஜேந்திரம், யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்ஹ, கண்காட்சியில் பங்குகொண்டிருந்த இந்திய, கொழும்பு நிறுவனங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் என, ஏராளமான பிரமுகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள் 'சிகரக் குடைக்கு' வந்து போயினர்.

சிகரம் ஊடக இல்ல மாணவர்களின் இணைய முயற்சியான JaffnaToday (www.JaffnaToday.com) இணையத்தளமும் குடைக்குள் அகலக் கணினித்திரையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்-தது. கண்காட்சி நடைபெற்ற ஜனவரி 21-23ம் திகதி வரையிலான மூன்று தினங்களும், நாளாந்த கண்காட்சி தொடர்பான செய்திகளுடன், ஏனைய செய்திகளும் உடனுக்குடன் அந்த இடத்திலிருந்தே தரவேற்றம் செய்து அகல கணினித்திரையில் காட்சிப்படுத்தப்பட்டது.

சிகரம் ஊடக இல்ல மாணவர்களின் இந்த முயற்சியால் ஈர்க்கப்பட்டு 'சிகரக் குடைக்குள்' வந்த தமிழ்நாட்டு சுயாதீன எழுத்தாளர் எஸ்.வி.பி. வீரக்குமார், மாணவர்களின் இந்த முயற்சியை வெகுவாக வியந்து பாராட்டினார்.

“இப்படியொரு முயற்சி யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கொள்ளப்படுவது ஆச்சரியமா இருக்கு. ரொம்பத் தரமா செய்யிறீங்க சார். லேயவுட் எல்லாம் பிரமாதமா இருக்கு” என்று மனந்திறந்து பாராட்டியவர், “படங்களுக்கு கப்ஷன் போடத் தவறிடுறீங்க. அது ரொம்ப முக்கியம். அடுத்தவாட்டி கவனம் செலுத்துங்க” என்று ஆலோசனை கூறவும் தவறவில்லை.

“வாசிப்பு ஆர்வம் இப்போ இங்கை ரொம்ப கம்மியா இருக்கு. ஒரு காலத்திலை நமக்கெல்லாம் தமிழ் சொல்லித்தந்த மண் இது. நாம மொதமொதல் கேட்ட வானொலியே இலங்கை வானொலிதான். மீண்டும் அந்த உயர்ந்த நிலைக்கு நீங்க போகணும். தயவுசெய்து உங்க முயற்சியை நிறுத்திடாதீங்க சார்” என்று அன்புக் கட்டளை இட்டு வாழ்த்திச் சென்றார் வீரக்குமார்.





தமிழக சுயாதீன எழுத்தாளர் எஸ்.வி.பி.வீரக்குமார்



யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம்




யாழ் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்ஹ


# நவீன வீடியோ கலந்துரையாடல் வசதியுடன் யாழ்ப்பாணத்தில் அமெரிக்க தகவல் கூடம்

# AMERICAN CORNER



அமெரிக்கத் தூதுவர் புட்டெனிஸ்





யாழ் இந்தியத் தூதரக உயரதிகாரி வி.மகாலிங்கம்

நவீன வீடியோ கலந்துரையாடல் வசதி (Video Conference), நூலகம், இணையக்கூடம் உள்ளிட்ட பல வசதிகளுடன், யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெருவிலுள்ள யாழ் சமூக செயற்பாட்டு மைய அலுவலகத்தில் அமெரிக்கத் தகவல் கூடம் ஜனவரி 24ம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் கூடத்தைத் திறந்துவைத்த இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான அமெரிக்கத் தூதுவர் பற்ரீஷியா புட்டெனிஸ் அம்மையார், இங்குள்ள வீடியோ கலந்துரையாடல் வசதியின் மூலம் கொழும்பு, ஒலுவில், கண்டி ஆகிய இடங்களிலுள்ள அமெரிக்க தகவல் நிலையங்களுடனும், சர்வதேச அளவிலும் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்களின் வளர்ச்-சிக்கு இந்த அமெரிக்க தகவல் கூடம் பல்வேறு வழிகளிலும் உதவி புரியும் என்று புட்டெனிஸ் அம்மையார் உறுதியளித்தார்.

1813ம் ஆண்டில் அமெரிக்க மிஷன் ஆரம்பிக்கப்பட்டது முதல் யாழ்ப்பாணத்துக்கும், அமெரிக்-காவுக்கும் இடையில் இருந்துவரும் மிக நீண்ட கால உறவை நினைவுடுத்தி இங்கு உரையாற்றிய புட்டெனிஸ் அம்மையார், அந்த உறவு அமெரிக்க தகவல் கூடம் மூலம் நவீன வடிவம் பெற்றிருப்பதாகக் கூறினார்.

"200 ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்க மிஷனரிமார் இங்கே வந்து ஆங்கில மொழியைக் கற்பித்தனர். தமிழ் மொழியைக் கற்று யாழ்ப்பாணத்தின் முதலாவது அச்சியந்திரத்தை ஆரம்பித்தனர். முதலாவது தமிழ் செய்தித்தாளையும், இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரியையும் அவர்களே தொடக்கி வைத்தனர்" என்று நினைவூட்டிய அவர், "இன்று யாழ்ப்பாணத்தின் முதலாவது ஏ.டி.எஸ் எல். இணைப்புடன் கூடிய வீடியோ கலந்துரையாடல் வசதியையும் நாம் வழங்குகிறோம்" என்று முடித்தார்.

'போர் ஓய்ந்தது, அமைதி திரும்பியது என்ற தொனிப்பொருளில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவியர் நிகழ்வின் ஆரம்பத்தில் வழங்கிய பாடல் இசை (Choir) அனைவரது உள்ளங்களையும் தொட்டது. பாடல் வரிகளின் பொருள் மட்டுமன்றி, அவற்றை மாணவர்கள் மலர்ந்த முகங்களுடன் எடுப்பாக அளிக்கை செய்த விதமும் அனைவரையும் ஈர்த்தது.

நல்லூர் கலா மந்திர் மாணவியரின் நடன விருந்து மற்றும் நாடகக் கலைஞர் சுலோச்சனாவின் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டிருந்த, யாழ் பல்கலைககழகம், திருமறைக் கலாமன்றம், சமூகச் செயற்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் மாணவர் அணியின் அரங்க ஆற்றுகைகள் என்பனவும் நிகழ்வுக்கு மெருகூட்டின.



பாடலிசைக்கும் உடுவில் மகளிர்....



நல்லூர் கலா மந்திர் ஆடல் மங்கையர்...

## யாழ் (அபத்த) நாடகத்துக்குத் தேசிய விருது

இது நம்மவர்கள் விருதுகள் பெறும் காலம். விளையாட்டு, கலை, இலக்கியம், நாடகம், குறும்படம் என்று ஏராளமான துறைகளில் விருதுகளைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விருதுகளுக்கெல்லாம் மகுடம் சூட்டுவதுபோல் தேசிய விருதுகளையும் நம்மவர்கள் வெற்றிகொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தத் தேசிய விருதுகள் வரிசையில் நாடகமொன்று இடம்பிடித்த பெருமை **கண்டல்** என்ற அபத்த நாடகத்துக்குக் கிடைத்திருக்கிறது.



எஸ்.ரி. குமரன், எஸ்.ரி.அருள்குமரன்

# தேசிய விருதுகள் வென்ற நம்மூர் நாயகர்கள் கண்டல் நாடகம் & பரு. உதைபந்தாட்ட லீக்


அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டத்தின் நாடகத்துறை இணைப்பாளர்களான எஸ்.ரி.குமரன் மற்றும் எஸ்.ரி.அருள்குமரன் சகோதரர்களின் எழுத்துருவாக்கம், நெறியாள்கை மற்றும் தயாரிப்பில் உருவான கண்டல், தேசிய மட்டத்தில் ஐந்து விருதுகளைப் பெற்று முதலாமிடத்தைக் கைப்பற்றியுள்ளது.

“முப்பது வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாண நாடகம் ஒன்று தேசிய விருதைப் பெற்ற பெருமையை மட்டுமன்றி, அபத்த நாடகமொன்று முதல் முறையாக தேசிய விருதைப் பெற்ற பெருமையும் கண்டலுக்குக் கிடைத்துள்ளது” என்று வெற்றிக்களிப்பில் உள்ளனர் அவர்கள்.

25வது சர்வதேச இளைஞர் வருடத்தை மையமாகக் கொண்டு இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இளைஞர் விவகார திறன்கள் அமைச்சு இணைந்து ஒழுங்கு செய்த 31வது தேசிய இளைஞர் விருது வழங்கும் விழாவில், தயாரிப்பு, நெறியாள்கை, வேடஉடை, ஒப்பனை உட்பட ஐந்து தேசிய விருதுகளை கண்டல் பெற்றது.

கொழும்பு லயுனல் வென்ற் கலையரங்கில் 2010 ஒக்டோபரில் நடைபெற்ற இப்போட்டியில் 25 க்கும் மேற்பட்ட சிங்கள நாடகங்களும், 4 தமிழ் நாடகங்களும் அரங்கேற்றப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, அனுராதபுரம் ஆகிய இடங்களிலிருந்து, முறையே கண்டல், பயணப்பை, கலைந்த கனவுகள், எங்களுக்காக என்ற நாடகங்கள் மேடையேறின.

அலுவலகம், வைத்தியசாலை, கல்வி, சமூகம் என்பவற்றைக் களமாகக் கொண்டு, மனித மனங்களுக்குள் மறைக்கப்பட்ட உணர்வுகளினூடாக வெளிக்கிளம்புகின்ற, மோதுகின்ற உணர்வுகளை இந்நாடகம் வெளிக்காட்டியது. இரண்டு சமூகங்களுக்கு இடையில் தனிமனிதன் ஆனவன் எவ்வாறு தனிமைப்படுத்தப்படுகின்றான் என்பதை கண்டல் சித்திரித்தது.



கண்டல் நாடகத்தை நெறியாள்கை செய்த எஸ். ரி.குமரன் மற்றும் எஸ். ரி.அருள்குமரன் சகோதரர்களிடம் அவர்களது இந்த முயற்சி பற்றி எமது ஊடக இல்லத்தில் உரையாடினோம்.

பாடசாலைக் கல்விக் காலங்களிலேயே நாடகத்துறையில் ஆர்வம் காட்டி வந்த இவர்கள், யாழ் பல்கலைக்கழகத்தில் அந்தத் துறையிலேயே கற்றுப் பட்டமும் பெற்றனர். தற்போது பாடசாலைகளில் நாடகக் கல்வி போதனையில் ஈடுபட்டவாறே, நாடக நெறியாள்கையிலும் ஈடுபட்டுவரும் இவர்கள், அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் என்ற அமைப்பில் நாடகத்துறைக்கு இணைப்பாளர்களாகவும் பணிபுரிகின்றனர்.

"ஆரம்பத்தில் 10 நிமிடம் கொண்டதாக ஆற்றுகை செய்யப்பட்ட இந்தப் படைப்பு, தொடர்ந்து காட்சிகளை மெருகூட்டி 28 நிமிடங்களில் 'கண்டல்'ஆகப் பரிணமித்தது. காட்சிகளை மாற்றுவதற்கு ஆடல், இசை வடிவங்களைக் கையாண்டுள்ளோம்'' என்று கண்டல் உருவான கதையைக் கூறினர்.

"இந்த நாடகத்துக்கு சௌந்தரராஜா, இயல்வாணன், பௌரவி, சிதம்பரநாதன், மகிழ்ச்சிகரன் ஆகியோர் தந்த ஒத்துழைப்புகள் முக்கியமானது. நாடகத்துக்கு இசையமைத்த யாழ். ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆசிரியர் எஸ்.சதீஸ் குறிப்பிடத்தக்கவர்'' என்று தமது முயற்சிக்குக் கைகொடுத்தவர்களை நினைவுகூர்ந்தனர்.

த.துவாரகன், கி.கிளைந்தன், ரி.கஜிந்தன், எ.அனோஜா, என்.பிபோனி, ஆ.அனுசன், ஆ.சுஜித்தா, எஸ்.ஈஸ்வரி ஆகிய கலைஞர்களின் நடிப்புத் திறன் இந்த நாடகத்தின் வெற்றிக்கு பிரதான காரணம் என்றும் அவர்கள் கூறினர்.

"யாழ். நாடகத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்கு நல்லதொரு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதுமட்டுமல்லாது, சிங்களக் கலைஞர்களும், சிங்கள ஊடகங்களும் எங்களைப் பாராட்டி ஊக்குவித்தார்கள். கண்டல் நாடகம் தேசிய ரீதியல் பங்கேற்றதற்கு ஒரு முஸ்லிம் கலைஞர்தான் எங்களுக்கு உறுதுணையாக இருந்தார்'' என்று தமது வெற்றிக்கு அங்கீகாரம் தந்தவர்களையும் இவர்கள் இந்த வேளையில் நினைவுகூரத் தவறவில்லை.

"தொடர்ந்து நாடகம் செய்யவேண்டும். சிறந்த முறையிலே எம்மை வழிநடத்தி, நாடகப் போட்டிகளிலும் பங்குபெறச் செய்து, இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களின் திறமைகளை வெளிக்காட்ட துறைசார்ந்தவர்களும், ஏனையோரும் ஊக்குவிக்க வேண்டும்'' என்று பணிவான வேண்டுகோள் ஒன்றையும் இவர்கள் முன்வைத்தனர்.

"யாழ்ப்பாணத்தில் எத்தனையோ சிறந்த நாடகக் கலைஞர்கள் தமது திறமைகளை வெளிக்-காட்டாது முடங்கியிருக்கின்றனர். அவர்கள் வெளிவரவேண்டும். புதிய கலைஞர்கள் உருவாகவேண்டும். அவர்கள் மூலம் ஆளுமையுள்ள தலைமைத்துவப் பண்பு கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்'' என்று தமது இலட்சியக் கனவை விபரித்தனர்.

இவர்களின் இலட்சியம் 'சிகரம் தொட' நாமும் வாழ்த்துவோம்!

**- நா.சாந்தரூபன்**



**2ம் அணி**

'நம்மூர் நாயகர்கள்' என்ற இந்தப் பகுதியூடாக எமது பிரதேசத்தின் சாதனைகள் நிகழ்த்தும் இளந்தலைமுறையினரை தொடர்ந்து வெளிக்கொணரவுள்ளோம். நீங்கள் அறிந்த சாதனையாளர்கள் பற்றி உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுடன் எங்களுக்கு எழுதியனுப்பி, அவர்களை ஊக்குவிக்கும் சிகரத்தின் பணியில் இணைந்துகொள்ளுங்கள்.

**'எம்மையே நாம் பாடுவோம்!**
**எமக்கே நாம் விழா எடுப்போம்!!**





"மனதில் வெற்றிப் பெருமிதத்துடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்தோம். கிளிநொச்சி நகரை அண்மித்தபோது, எம்மை வரவேற்க நெல்லியடியில் பெருந்திரளானோர் காத்திருப்பதாக நண்பர்கள் தொலைபேசியில் கூறினர்".

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் டிசம்பர் மாதம் நடத்தப்பட்ட 45 உதைபந்தாட்ட லீக் கௌரவங்களுடன் பாராட்டுவிழா நடத்தினர்.

கல்வி, பொருளாதாரம், சுயதொழில், வேலைவாய்ப்பு என ஒவ்வொன்றிலும் சடுதியான முன்னேற்றம் காணும் யாழ்ப்பாணத்தில், விளையாட்டுத்துறையிலேயே அதிகளவு சாதனைகள் நிகழ்கின்றன. இந்தச் சாதனைகளுக்கே மகுடம் சூட்டி, பருத்தித்துறை மண்ணுக்கும், யாழ்ப்பாணத்துக்கும், முழு வட

மக்கள் பாதுகாப்புப் படையணியை 3:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, இந்த மக்களுக்கு வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தனர் பருத்தித்துறை லீக் அணியினர்.

யாழ்ப்பாணம் குறிப்பாக வடமாகாணம் முதன்முதலில் உதைபந்தாட்டத்தில் தேசியக் கிண்ணம் வென்ற பெருமை இந்த வெற்றியால் கிட்டியது.



# உதைபந்தால் உயர்ந்த யாழ்ப்பாணம்

அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தேசிய சம்பியனான பருத்தித்துறை லீக் அணி வீரர்களுக்கு கிடைத்த இன்ப அதிர்ச்சியே இது!

ஜனவரி 10ஆம் திகதி நெல்லியடிச் சந்தியில் வந்திறங்கிய இவ்வீரர்களை பட்டாசுகள் கொழுத்தி ஆரவாரம் செய்து வரவேற்றனர் மக்கள். பான்ட் வாத்திய இசையுடன் பருத்தித்- துறை தேவரையாளி இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அழைத்-துச் செல்லப்பட்டு, படையதிகாரிகள், பொலிஸார், ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் வடமராட்சிப் பொறுப்பாளர், கல்விச் சமூகத்தினர், வர்த்தகர்கள் என ஏராளமானோரின் வாழ்த்துக்கள்,

மாகாணத்துக்குமே உதைபந்தால் பெருமை பெற்றுத் தந்துள்ளனர் இந்த வடமராட்சி மைந்தர்கள்.

ஜனவரி 9ம் திகதி நடைபெற்ற தேசிய உதைபந்தாட்ட லீக் இறுதிப்போட்டி வட பகுதி உதைபந்தாட்ட இரசிகர்களிடம் அபரிதமான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. எவரோ, எந்தெந்த நாடுகளிலோ விளையாடும் விளையாட்டுக்களுக்காக தொலைக்காட்சிகளுக்கு முன்னால் தவிப்பில் இருப்பவர்கள், இம்முறை தம் மண்ணின் மைந்தர்களின் வெற்றிக்காகப் பிரார்த்தித்தபடி காத்திருந்தனர்.

பருத்தித்துறை லீக் அணியின் அணித்தலைவர் V.ராஜ்குமார், வீரர்களான M.பிறேம்குமார், K.அரவிந்தன், S.மயூரன், S.பாலகரன், C.சுயந்தன், V.துசியந்தன், V.றெஜினோல்ட், அலெக்ஸ் றெஜினோல்ட், T.லக்ஸ்மன், M.சதீஸ்கரன், R.கான்டீபன், T.யூட்தினேஸ், A.மரியதாசன், M.நகுலேஸ், P.L.P.V.பெர்னான்டோ, S.J.கனடி, T.பிரசாத், E.J.A.A.தாசன் ஆகியோரே இந்தச் சாதனையை வென்றுவந்த வீரர்கள்.

இப்போட்டியின் அனைத்து சுற்றுகளிலும் 16 கோல்களைப் போட்டு தனக்கென ஓர் சாதனையை நிலைநாட்டிய வீரர் வதிரி டயமன்ட்ஸ் கழகத்தைச் சேர்ந்த M.பிறேம்குமார்.


V.ராஜ்குமார்

'சாதனை படைக்கும் வதிரி டயமன்ஸ்' என்ற தலைப்பின் கீழ் தேசிய அணியில் இடம்பிடித்த இவ்வீரர் பற்றி 'சிகரம் தொடு' மார்கழி இதழிலேயே நாம் கூறியிருந்தோம்.

அண்மையில் பொங்கல் சிறப்பு விழாவிற்காக யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த ஜனாதிபதி, வெற்றி பெற்ற இவ் வீரர்களை பாராட்டி வாழ்த்தியதுடன், ரூ.136,000 பெறுமதியான காசோலையையும் வழங்கிக் கௌரவித்தார். வட-மாகாண ஆளுநர் G.A. சந்திரசிறி தமது பங்குக்கு இந்த வீரர்கள் ஒவ்வொருவருக்கும் காலணி, உடை உட்பட 8500 ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கினார்.


V.முகுந்தன்

"வடமராட்சி வீரர்களின் வீரம் இன்னும் மங்கவில்லை என்று இம்முறை நிருபித்துக் காட்டியுள்ளனர். அணி வீரர்கள், லீக் செயற்குழு, பருத்தித்துறை மத்திய சங்கம் என அனைவரினது அர்ப்பணிப்பும், பெற்றோருடைய ஊக்குவிப்பும், முயற்சியுமே இந்தத் தேசிய வெற்றிக்குக் காரணம்" என மெய்சிலிர்த்தார் பருத்தித்துறை லீக் அணியின் பயிற்சியாளர் வி.முகுந்தன்.

| போட்டி விபரம் | | | |
|---|---|---|---|
| 1வது போட்டி | மனோகரா மைதானம் | யாழ் லீக் அணி | பெனால்ரி வெற்றி |
| 2வது போட்டி | அநுராதபுரம் மைதானம் | விமானப்படை அணி | பெனால்ரி வெற்றி |
| 3வது போட்டி | மட்டக்களப்பு மைதானம் | மட்டக்களப்பு லீக் அணி | 6:3 கோல் கணக்கில் |
| காலிறுதிப் போட்டி | நெல்லியடி மைதானம் | அநுராதபுரம் லீக் அணி | 4:1 கோல் கணக்கில் |
| அரையிறுதிப் போட்டி | கொழும்பு சிற்றி லீக் மைதானம் | நீர்கொழும்பு அணி | 3:1 கோல் கணக்கில் |
| இறுதிப்போட்டி | கொழும்பு சிற்றி லீக் மைதானம் | மக்கள் பாதுகாப்புப் படையணி | 3:1 கோல் கணக்கில் |

நாடு முழுவதும் 45 கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட இந்த உதை-பந்தாட்டப் போட்டியில் ஆரம்ப போட்டியிலி-ருந்து இறுதிப் போட்டி வரைக்கும் களத்தில் நின்று அணியை வழிநடத்தியவர் இவரே.

பருத்தித்துறை லீக் அணியின் இந்த வெற்றிப்பயணம் தொடர்ந்து, இன்னும் பல சாதனைகள் படைக்க நாமும் வாழ்த்துவோம்!

**- மா.சுரேஸ், 2ம் அணி**

# 'நம்மூர் சச்சின்' எடின்

248 பந்துகளில் 247 ஓட்டங்கள்.
தனது கிரிக்கெற் வரலாற்றில் 4வது சதம்.
முதல் இரட்டைச்சதம்.

இப்படி ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார் யாழ் மத்திய கல்லூரி கிரிக்கட் வீரர் இரட்ணம் எட்வேர்ட் எடின்.



இலங்கை கிரிக்கட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட கிரிக்கட் சங்கம் யாழ் மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கிடையில் நடத்திய போட்டி வரிசையில், ஜனவரி 23இல் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு எதிரான ரெஸ்ட் போட்டியில் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

இன்னிங்ஸாலும், 355 ஓட்டங்களாலும் மானிப்பாய் இந்துவை வெல்வதற்கு இவரது துடுப்பாட்டம் கைகொடுத்தது.

மத்திய கல்லூரியின் பந்துவீச்சாளர்களான கோகுலன் 3 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், வதூஸனன் 19 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் முதல் இன்னிங்சில் வீழ்த்த, தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சில் மீண்டும் வதூஸனன் 5 விக்கெட்க்களையும், ஜெரிக் துசாந்த் 3 விக்கெட்களையும், தர்சன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

கல்லூரி மைதானத்தில் கிரிக்கெற் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எடினைச் சந்தித்தோம்.

"முக்கிய வீரர்கள் ஆரம்பத்தில் அடுத்தடுத்து வெளியேறிச் சென்ற-மையால், அணியின் ஸ்தரத்திற்கு எனது விக்கெற்றைக் காக்க வேண்டியிருந்தது. எனவே, நிதானமாக விளையாடினேன். முதலாவது சதத்தை அடைந்ததும், எனது முன்னைய சாதனை இலக்கை (167 ஓட்டங்கள்) முறியடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் விளையாட, நானே எதிர்பார்க்காத விதமாக இந்த இலக்கை அடைந்தேன்" என்று சிலிர்த்தார் அவர்.

"கடவுளின் அருள், கிரிக்கெற் பயிற்றுவிப்பாளர் சுரேஷ் மோகனின் வழிகாட்டல், பெற்றோரின் ஆதரவு. இவைதான் என் சாதனைக்குக் காரணம்" என அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்தவர்,

"விளையாட்டு எனது கல்விக்கு எந்த விதத்திலும் முட்டுக்கட்டையாக இருந்ததில்லை" என்று முடித்தார்.



கா.பொ.த. உயர்தரத்தில், கலைத்துறையில் மூன்று பாடங்களுக்கும் A, B, C என்ற பெறுபேற்றைப் பெற்றதன் மூலம் இதை அவர் நிரூபித்துள்ளார்.

இவரது வெற்றிப் பயணம் 'சிகரம் தொட' எமது வாழ்த்துக்கள்!

**- இ.பானுஷன்,3 ம் அணி**

## ஆயிரம் வாசல்

# ‘வியாபாரத்துக்கான நுழைவாயில்’ இனங்காட்டிய கல்வி வாசல்கள்

அண்மையில் நடைபெற்று முடிந்த வர்த்தக கைத்தொழில் கண்காட்சி வர்த்தகர்களுக்கு மட்டுமன்றி, மாணவ சமுதாயத்தினருக்கும் பயனுள்ள நுழைவாயிலாகவே இருந்தது. இக்கண்காட்சியில் கல்வி நிறுவனங்களுக்காக தனியே அமைக்கப்பட்டிருந்த காட்சி அரங்கில் ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் தம்மை அறிமுகப்படுத்தியிருந்தன.

இவற்றுள் தொழில் உத்தரவாதமான கற்கைநெறிகளை வழங்கும் சில நிறுவனங்களை இங்கே உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

### உயர் நிர்மாணப் பயிற்சிக் கல்வியகம் (ACTA)

நிர்மாணத் தொழிற்துறையில் பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட உயர் நிர்மாண பயிற்சிக் கல்லூரி (ACTA), தேசிய நிர்மாண சேவைகள் சங்கத்தின் பயிற்சி வழங்கும் ஒரே நிறுவனமாகும். இது, மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், லண்டன், நோர்த்தம்பிரியா பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பயிற்சிக் கல்லூரியாகவும் உள்ளது.

**இந்நிறுவனத்தின்கீழ் தொடரக்கூடிய கற்கைநெறிகள்:**

- நில அளவையியல் டிப்ளோமா கற்கைநெறி
- நிர்மாண செயற்திட்ட முகாமைத்துவம்
- நிர்மாணத் தொழில்நுட்பம்
- வரையியல்
- நிலவியல் மற்றும் தோட்டவியல்




- நிர்மாணத் தொழில்சார் கற்கைகள்
- ஆங்கிலக் கற்கைநெறிகள்

மேலதிக விபரங்களுக்கு: இல. 50A, “இடிகிறீம் மீடுற”, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை. தொ.பே.இல: 0112-786508 / 0115-672278

### ASPIRE - சர்வதேச ஆளுமை விருத்திக் கல்லூரி

இலங்கை முதலீட்டுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, விசேடமாக விமானப் பயணவியல் கற்கைநெறிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், இல:280, ஹைலெவல் வீதி, கொழும்பு-6 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

டுபாயில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இந்நிறுவனத்தின் கீழ் பின்வரும் பாடநெறிகளுக்கான சர்வதேசத் தரம் வாய்ந்த உயர் தேசிய டிப்ளோமா கற்கைகள் நடைபெறுகின்றன.

- விமானப் பயணவியல் முகாமைத்துவம் (Aircraft Management)
- உபசரணை முகாமைத்துவம் (Hospitality Management)
- போக்குவரத்து மற்றும் உல்லாசப்பயணத்துறை முகாமைத்துவம் (Travel & Tourism Management)

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல: 0117667755 / 077-2355568

### CINEC மெரிரைம் கம்பஸ்

கடல்சார் கற்கைநெறிகளை பிரதானமாகக் கொண்ட இந்நிறுவனமானது, சிறந்த நிர்வாகம், சூழலியல், தொழில்சார் நலன் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுக்கு ISO தரச் சான்றிதழ் பெற்ற ஒரு நிறுவனமாகும்.

மிலேனியம் ட்ரைவ், ஐ.ரி பார்க், மலபே எனும் முகவரியில் அமைந்து உள்ள இந்நிறுவனம், 4 பிரதான கல்விப்பீடங்களின் கீழ் 150இற்கும் மேற்பட்ட தரமான கல்விசார் செயற்திட்டங்களை கொண்டமைந்தது.

கடல்சார் கற்கை, இராணுவ நிர்வாகவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொது பொறியியல் ஆகிய துறைகளில், சான்றிதழ் தொடக்கம் கலாநிதிப்பட்டம் வரையிலான கற்கை நெறிகள் நடைபெறுகின்றன.

சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பட்டக்கல்வியே இங்கு வழங்கப்படுவதால், அவுஸ்திரேலியா, லண்டன், சீனா போன்ற நாடுகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களையும் இது வழங்கிவருகின்றது.

**இக்கல்வி நிறுவனத்தில் தொடரக்கூடிய கற்கை நெறிகள்:**

- ✔ கப்பல் மாலுமியாவதற்கான பயிற்சித் திட்டம்
- ✔ கடல்சார் மின்சார பொறியியல் திட்டம்
- ✔ இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல்
- ✔ இயந்திர மின்னணுவியல்
- ✔ சர்வதேச போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் இராணுவ நிர்வாகவியல்
- ✔ தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி மொழிசார் டிப்ளோமா கற்கைகள்

இன்னும் பல தொழில் உத்தரவாதமான கற்கைநெறிகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு : தொ.பே.இல: 0114486400 / 0777636280

## EPC- Ezzah தொழில்நெறிக் கல்லூரி

'சிந்தியுங்கள்... தேடுங்கள்... தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்...' என்ற எண்ணக்கருவை மையமாகவைத்து, 100% கல்வியையே முதலீடாகக் கொண்டமைந்த ஓர் தொழிற்கல்வி நிறுவனமாகும். இல.95,2/2, காலி வீதி, கொழும்பு-4 இல் அமைந்துள்ள இந்நிறுவனமானது, தமது கற்கைநெறிகளுக்கூடாக கல்வியறிவுடன் தொழிற்தகைமைகளையும் மாணவர்களுக்கு அளிக்கிறது.

**இங்கு தொடரக்கூடிய கற்கைநெறிகளாவன:**

- வணிக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகவியல்.
- முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான டிப்ளோமா கற்கைகள்.
- கணினி விஞ்ஞானம்.
- இலத்திரனியல் சந்தைப்படுத்தலுக்கான டிப்ளோமா கற்கைகள்.
- சுகாதார முகாமைத்துவம்.
- முகாமைத்துவத்திற்கான சான்றிதழ் கற்கைகள்.

மேலதிக தகவல்களுக்கு: தொ.பே.இல: 0112589868 / 0777276612

[மேலும் பல கல்வி நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் அடுத்த இதழில்]



- சிந்து.சச்சி
2ம் அணி

## யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் கற்கைநெறிகள்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கவுள்ள புதிய ஹோட்டல் பாடசாலையின் கற்கைநெறிகளுக்கு மாணவர்கள் இணைக்கப்படவுள்ளனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத்தரக்கூடிய, ஹோட்டல் பராமரிப்பாளர், ஹோட்டல் மேற்பார்வையாளர் அல்லது உபசரணையாளர், ஹோட்டல் நவீன சமையலாளர் ஆகிய கற்கைநெறிகள், பகுதி நேரமாகவும், முழு நேரமாகவும் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உல்லாசப் பயணத்துறை வேகமாக வளர்ந்து வருவதுடன், 2012இல் பல நவீன உல்லாச விடுதிகளும் அமைக்கப்படவிருப்பதால், ஏராளமான தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கு இந்தக் கற்கைநெறிகள் கைகொடுக்கும்.

இணைய விரும்பும் மாணவ மாணவிகள் தமது முகவரியுடன் கூடிய சுயவிபரக்கோவையை, மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல:375, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## கடலோட்டு இயந்திரவியல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம் கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியில் ஒன்பது மாதகால டெக் அலுவலர் மற்றும் கடல் மாலுமி பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறி முதல் தடவையாக கொழும்பு சமுத்திரவியல் சர்வகலாசாலையின் அனுசரணையுடன் நடத்தப்படவிருப்பதாக கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் ஆர். செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர், பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும், கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருப்பதுடன், கடல் அனுபவம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். விண்ணப்பங்களை கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியில் நேரடியாக ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை

இலங்கையிலும், உலகெங்கிலுமுள்ள தமிழ் எழுத்தாளர்கள், கலைப் படைப்பாளிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சங்கமிக்க வைத்தது கொழும்பில் நடந்த முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு.

தொடர்ச்சியான வன்முறைக் கலாசாரத்தால் உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களின் மனதை கலை இலக்கியங்கள் ஊடாக வென்றெடுக்கும் நோக்கில் இந்த மாநாட்டை சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. 'அறிந்ததை பகிர்தல், அறியாததை அறிந்துகொள்ள முயல்தல்-அதற்கான அனுபவப் பகிர்வு' நிகழ்வாகவே அவர்கள் இதனை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

பலதரப்பட்ட எதிர்ப்புகளுக்கும் ஆதரவுகளுக்கும் இடையில், குறுகியகால அவகாசத்தில் இப்படி ஒரு சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை இலங்கையில் நடத்தி முடித்தமைக்காக விழாக்குழுவினருக்கு சபாஷ் போடலாம்.

இலங்கை, அவுஸ்ரேலியா, கனடா, தமிழகம், சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலக்கிய ஆர்வலர்களாகவும், பேராளர்களாகவும் பலர் இதில் கலந்து கொண்டனர். தமிழகத்திலிருந்து 45க்கு மேற்பட்டவர்கள் ஒரு குழுவாக பங்குகொண்டமை சிறப்பு.

முதல் நாளான தை மாதம் 6ஆம் திகதி மாநாடு நடைபெற்ற வெள்ளவத்தை தமிழ்ச் சங்கம் அமைந்துள்ள உருத்திரா மாவத்தை - காலி வீதி சந்தியிலிருந்து எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் பாரம்பரிய இசை-நடன ஊர்வலத்துடன் மாநாட்டு மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.


கொழும்பு தமிழ்ச்சங்க வளாகத்திலுள்ள சங்கரப்பிள்ளை, குமாரசுவாமி வினோதன், சுப்பிரமணியம் மாலதி மண்டபங்களில் தமிழுக்கும், தமிழ் எழுத்துலகிற்கும் பெருமையும் சேவையும் செய்த, தமிழ்த்தூது தனிநாயகம் அடிக-ளார், எஸ்.டி.சிவநாயகம், இலங்கையர்கோன், மங்களநாயகியம்மாள், சோமசுந்தரப் புலவர், ஆறுமுக நாவலர், கே.டானியல், கே.நடேசையர்,சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் சு.வித்தியானந்தன், வரதர், சித்திலெப்பை, கலையரசு சொர்ணலிங்கம், அருள்வாகி அப்துல் காதர், அல்லாமா ம.மு.உவைஸ், பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின்



பெயர்களில் அரங்குகள் 9ம் திகதி வரை 4 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றன.

கணினி வலைப்பதிவு, ஈழத்து தமிழ் இலக்கியம், ஆவணப்படுத்தல், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, சிற்றிதழ், பெண் எழுத்து, உலகத் தமிழ் இலக்கியம், செவ்விதாக்கம், அவைக்காற்றுக் கலைகள், பல்துறை, நாட்டாரியல் மற்றும் குறும்படங்கள் தொடர்பாக இந்த அரங்குகள் நடைபெற்றன. கூடவே கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

"ஈழத்துத் தமிழ் இலக்கியச் செயல்நெறியில் எதிர்ப்பிலக்கியத்தின் வகிபாகம்'', "நலிவுற்ற மக்கள் தொடர்பான இலக்கியப் பதிவுகள் போதிய கவனத்தைப்பெற்றுள்ளனவா?'', "நவீன தமிழ் இலக்கியம் உலகத்தரத்தை எட்டியுள்ளதா?'' என்ற தலைப்புக்களில் கருத்தரங்குகள் நடைபெற்றன.



லெ.முருகபூபதி

இது ஒரு குழுநிலை அளவிலான செயற்தளத்தைக் கொண்டுள்ளது. விரிந்த தளத்தில் இதன் உரையாடல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்ற வாதங்களும் மாநாட்டின் ஒருபுறத்தே எழுப்பப்பட்டிருந்தன. கடந்த 25 ஆண்டுகால எதிர்ப்பிலக்கியம் அல்லது ஜனநாயகத்துக்கான போராட்டம் எனக் கருதும் இலக்கியம், முஸ்லீம்கள், மலைகளைச் சுமக்கும் மலையக மக்கள், தலித்துக்கள் போராளிகளாக தம்மை அறிவித்துக்கொண்டவர்கள், பிற உதிரிகள் ஆகியோரை உள்ளடக்கிய விளிம்புநிலை இலக்கியச் செயற்பாடுகள் மாநாட்டில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என அவர்கள் வாதிட்டனர்.

இந்த எதிர்வாதங்களுக்கு மத்தியிலும்....



"இன்று இந்த நாட்டில் வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களும், இதே பிரதேசத்திலும் தென்னிலங்கையிலும் வாழும் முஸ்லிம் மக்களும், மலையகத்தில் வாழும் மக்களும் தமிழ் பேசும் மக்களாவர். மதத்தினால் வேறுபட்டிருந்தபோதிலும் இவர்களது பேசும் மொழியாகவும்




தமிழக எழுத்தாளருடன் சிகரம் குழுவினர்


எழுதும் மொழியாகவும் தமிழே விளங்குகின்றது. இம் மக்களிடம் தமிழ் கலை, இலக்கிய எழுத்தூழியத்தில் ஈடுபடும் படைப்பாளிகளும், இதழியல்



துறையில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் மொழி அடிப்படையில் சமூக விழிப்புணர்வுகளையும், புரிந்துணர்வு ஒற்றுமையையும் சர்வதேச எழுத்தாளர் மாநாடு ஏற்படுத்தியுள்ளது'' என்று, மாநாட்டின் பிரதான அமைப்பாளரான அவுஸ்திரேலியா வாழ் எழுத்தாளர் லெ. முருகபூபதி பெருமைப்பட்டது சரியே என்பதை மாநாடு நிரூபித்திருந்தது.

தமிழின் தொன்மை, அதன் வளம், புகழ் மண்டிக் கிடக்கும் அதன் பண்பாடு பற்றியெல்லாம் ஆராய்பவர்கள் மென்மேலும் அவைபற்றி ஆராய விரும்புவர். இதனால்தான் தமிழாராய்ச்சி வளர்ந்துகொண்டே இருக்கின்றது. இதன் ஒரு வெளிப்பாடாகவே நடைபெற்று முடிந்த இந்த மாநாடு அமைந்திருந்தது எனலாம்.

"இருந்தமிழே உன்னிலிருந்தேன் இமையவர்தம்
விருந்தமிர்தம் என்றாலும் வேண்டேன்''



மாநாட்டு மண்டபத்திலிருந்து

**மு.கோபி**

**2ம் அணி**



## அன்பின் சிகரம் ஊடக இல்லத்தாருக்கு எழுதிக்கொள்வது...

முப்பது வருடங்களாக அழிந்த பூமி இது.

அழித்த போர் போய்த்தொலைந்தது.

போரின் விளைவுகள் எஞ்சிக்கிடக்கின்றன.

பெற்றோரைப் போர் தின்ற பின்னர் அனாதரவாகிப் போன பிள்ளைகள்;...

கணவன்மாரை இழந்த விதவைகள்...

ஊனப்பட்ட ஆண்கள் – அவர்களே உழைப்பாளிகளாக – குடும்பத் தலைவர்களாக தங்களது குடும்பங்களை காப்பாற்றும் அவலச் சூழல்...

சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

அழிந்த உட்கட்டுமானங்களை புனரமைப்பதிலும், மேலும் புதிய உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலும் அக்கறை செலுத்தப்பட்டு வருகிறது.

போர்க்காலத்தில் எதிரும் புதிருமான தரப்பினர் விதைத்த கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன. மந்த கதியிலாயினும் மீள் குடியேற்றம் நிகழ்கிறது.

அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகளை விமர்சிப்போரும் உள்ளனர்.

இவ்வாறான போருக்குப் பிந்திய சூழலில் – பொருளாதார ரீதியிலும் 'எதுவுமற்ற நிர்வாணிகளாகிப் போன' சாதாரண சனங்கள், இன்னமும் பசிப்பிணி போக்கும் வழி தெரியாது அழுகின்றனர்.

"பட்டுவேட்டி பற்றிய கனவோடு இருந்தபோது, கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது" என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகளை இது ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறது.

வெட்கத்தோடு கூசிக் குலைந்துபோயுள்ள நமது சனங்களுக்கு முதலில் கோவணத்துண்டாவது கொடுக்கவேண்டும்!

அடுத்து, குடிக்கக் கூழோ, கஞ்சியோ, சாப்பிடச் சோறோ, கறியோ தேவை.

நோய்க்கு மருந்து... ஆஸ்பத்திரி... பிள்ளைகள் படிக்கப் பள்ளிக்கூடம்.

போரினால் முகவரி இழந்த இந்தச் சனங்களுக்கு படிப்படியாக காணிநிலம், வீடுவாசல் என்று மறுவாழ்வுக்கு வழி பிறக்கவேண்டும்.

அதைவிடுத்து, மீண்டும் மீண்டும் பட்டு வேட்டி பற்றிய கனவை விதைக்க முனையும் சில ஊடக முயற்சிகள், "பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடலாம் தானே" எனும் கதைபோல உள்ளது.

கோவணம் தேவையில்லை, முதலில் பட்டு வேட்டி பற்றிய கனவே தேவை என்று, 'பட்டபாடுகளும் கற்ற பாடங்களும்' விளங்காமல் பேசும் இந்த ஊடக முதலாளியம், மீண்டும் மீண்டும் மக்களை உணர்ச்சிவாதச் சகதிக்குள் தள்ளிவிட முனைகிறது.

முள்ளிலே 'சீலை' விழுந்துவிட்டது.

மெல்லக் கிழியாமல் எடுத்து உடுத்திக்கொள்ளும் அறிவுபூர்வமான அரசியல் பொருளாதாரச் சிந்தனை படைத்த – சாதாரண ஏழைச் சனங்களின் பிரச்சினைகளை விளங்கக்கூடிய– மனிதநேயமிக்க ஊடகவியலாளர்களும், அவ்வாறான ஊடகவியலாளர்களை உருவாக்கத்தக்க ஊடக நிறுவனங்களும், ஊடகப் பயிற்சி நிலையங்களும் யாழ்ப்பாணத்தில் காலத்தின் தேவையாக உள்ளது.

இலங்கைத் தீவில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சிறுபான்மை இனங்களுடன் நல்லிணக்கமான புரிந்துணர்வுடன் கூடிய சமூக, பொருளாதார, அரசியல் சகவாழ்வுக்கான சிந்தனைகளை சனங்கள் மத்தியில் கொண்டுபோய்ச் சேர்க்கும் நேர்த்தன்மையான ஊடகவியலாளர்களுக்கும், ஊடகச் சிந்தனைவாதிகளுக்கும் வரவேற்பளிக்கவே காலதேவதை காத்திருக்கிறாள்.

காலதேவதையின் இந்தக் கரங்களைப் பற்றிக்கொண்டு சிகரம் ஊடக இல்லம் மெல்ல மெல்ல நடக்கத் தொடங்கியிருப்பதை உணர முடிகிறது.

முற்போக்கான, நேர்த்தன்மையான, நேர்மையான ஊடகப் பரம்பரையொன்றை அது உருவாக்கத் தொடங்கிவிட்டமை மகிழ்ச்சி தருகிறது.

"பிற்போக்குப் பாறை பிளந்து, பயன்விளைப்பான் என்னுரரான்"

என்ற உறுதியான நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

மீண்டும் அடுத்த மடலில் சந்திப்பேன்.

வாழ்த்துக்களுடன்,

*கனகநாயகம் வேல்தஞ்சன்*

# கணி-நீ

**எதிர்கால இலட்சியத்தை - அதற்கான கல்வியை**



## மணிக்(கூட்டு) கைத்தொலைபேசி

நோக்கியா ஆராய்ச்சி நிலையம் மற்றும் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ள இந்த மோர்ப் (MORPH) எனும் தொலைபேசியின் மாதிரி வடிவம் தற்போது நியூயோர்க்கிலுள்ள மொடேர்ன் ஆட்ஸ் (Modern Arts)· நூதனசாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பயனர்கள் தமது விருப்புக்கேற்ப வடிவத்தை மாற்றியமைக்கக்கூடிய நெகிழ்வுத்தன்மையான Morph கைத்தொலைபேசி 2017ஆம் ஆண்டளவில் சந்தைக்கு வரவுள்ளது.


சூரியக்கலத்தில் இயங்கக்கூடிய இது, தானாகவே சுத்தமாக்கக்கூடிய (Self-cleaning surface) வசதியையும் கொண்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்ப இணைப்பிதழ்**

# கணினி அறிமுகமும் அடிப்படைக்கட்டமைப்பும்

**C.P.Uவின் தொழிற்பாட்டுக் கட்டமைப்பு:**

கீழுள்ள படம் ஒரு Processor ஆனது கணினியின் ஏனைய பகுதிகளுடன் எவ்வாறு தொடர்புபட்டுச் செயற்படுகின்றது என்ற அடிப்படைக் கட்டமைப்பைக் காட்டுகின்றது. குறித்த படத்தில் காணப்படும் Primary Memory, Secondary Memory போன்றவை பற்றிய விளக்கங்களைப் பின்னர் விளக்கமாகக் கற்போம்.




Control Unit ஆனது மத்தியசெயற்பாட்டுத் தொகுதியின் (Processor) ஒரு முக்கிய பகுதியாகும். இது கணினியின் சகல பாகங்களையும் கட்டுப்படுத்துதல், ஒருங்கிணைத்தல் போன்ற பல செயற்பாடுகளைச் செய்கின்றது. பின்வருவனவற்றில் Control Unit ஆல் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் சிலவற்றைக் கவனிக்க


1. Input Devices களிலிருந்து வரும் தரவுகளையும் அறிவுறுத்தல்களையும் ஏற்றுக்கொள்வதோடு அவற்றை நினைவகத்தில் சேமித்து வேண்டியபோது எடுப்பதற்கான கட்டளைகளையும் வழங்குகின்றது.
2. நிகழ்ச்சித்திட்டங்களில் கொடுக்கப்படும் அறிவுறுத்தலுக்கான கட்டளைகளை கணினிகளின் ஏனைய பகுதிகளுக்கு அனுப்புகின்றது.
3. கணித மற்றும் தர்க்க ரீதியான செயற்பாடுகளுக்குரிய கட்டளைகளை A.L.Uவிற்கு வழங்குகின்றது.
4. மற்றைய அனைத்துப் பகுதிகளுக்குமான கட்டளைகளை வழங்குவதன் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தி ஒருங்கிணைக்கின்றது.

## (II) Arithmetic and Logical Unit (A.L.U) கணித தர்க்கச் செயற்பாட்டுத் தொகுதி

இதுவும் மத்திய செயற்பாட்டுத் தொகுதியின் (Processor) ஒரு முக்கிய பகுதியாகும். இது கணித மற்றும் தர்க்க ரீதியான செயற்பாடுகளைச் செய்வதுடன் செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் நினைவகத்திற்கு அனுப்புகிறது.


## கணினி இயக்கத்திற்கான பிரதான இரு பகுதிகள்

கணினி இயக்கத்திற்கான பிரதான இரு பகுதிகளையும், தொட்டுணரக்கூடியவை, தொட்டுணர முடியாதவை எனப் பிரித்து நோக்கலாம். இவற்றுள் தொட்டுணர முடியாதவையான கணினியை இயங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் Softwareகள் எனவும். ஏனைய கணினியின் பாகங்களாக





உள்ள தொட்டுணரக்கூடியவை அனைத்தும் Hardware எனவும் அழைக்கப்படுகின்றன.




- 8 -

## (I)Hardware (வன்பாகம்)

கணினியை ஆக்கப் பயன்படுவதும், Software இனால் செயற்படுத்தப்படுபவையுமான இலத்திரனியல் சுற்றுக்கள் அடங்கலாக தொட்டுணரக்கூடியவை அனைத்தும் Hardware எனலாம்.

## (II) Software(மென்பாகம்)

கணினியினால் செயற்படுத்தப்படுகின்ற அறிவுறுத்தற்பட்டியல்கள், தரவுகள் போன்ற தொட்டுணர முடியாதவை அனைத்தும் Software எனப்படும். மென்பாகம் மென்மையானதல்ல. உண்மையிலிதனை தொடவோ, உணரவோ முடியாது. மென்பாகத்தில் உருவாக்கும் அனைத்து தகவல்களும், அறிவுறுத்தல்களும் உங்களது மூளையின் சகல எண்ணங்களையும், உத்திகளையும் ஒத்தவையே. அதாவது, நீங்கள் உங்கள் தலையைத் தொடலாம் உங்களது எண்ணங்களைத் தொட முடியாது என்பது போன்றதொரு நிலைதான் இங்கும் உள்ளது.

## Lifeware (உயிர்மப்பொருள்)


கணினியின் Hardware, Software போன்ற அனைத்து பாகங்களையும் இயக்கும் பயன்பாட்டாளர்கள் Lifeware எனப்படும்.

## Firmware (ஆரம்ப மென்பாகம்)

கணினியை on செய்தவுடன் கணினியுடன் இணைத்துள்ள உபகரணங்களனைத்தும் சீராக இயங்குகின்றனவா, சரியாக இணைந்துள்ளனவா எனப் பரிசோதிப்பதும் இந்த நிகழ்ச்சிதிட்ட, அறிவுறுத்தல்களை பயோஸ் Bios Basic Input Output System என அழைக்கப்படுகிறது. ஏனைய Softwareகள் இதனை அடிப்படையாக வைத்தே இயங்கக் கூடியவாறும், கணினியின் தாய்ப்பலகையில் அமைந்துள்ள ஒரு IC சிப் (Integrated Chip) ஒன்றினுள் பதியப்பட்டுள்ளதும், மாற்றவோ, அழிக்கவோ முடியாததுமான ஒரு நிரந்திர செய்நிரல் அறிவுறுத்தல் தொகுப்பாகும்.

இதனுள், **POST** (Power On Self Test) எனப்படும் சிறு செய்நிரல் (Program) உம் உண்டு ■

**- சு.நேதாஜி**




# இணையப்பரப்பில் உங்களுக்கென்றொரு HardDisk

Cloud Computing பற்றிய எண்ணக்கருவை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன். எம்மில் பலரும் தெரிந்தோ தெரியாமலோ, Cloud Computing உடன் தமது கருமங்களை நாளாந்தம் செய்துகொண்டுதான் இருக்கின்றனர்.

இந்த Cloud Computing இன் பிரயோகங்களாக நாம் அன்றாடம் இணையநிலைகளில் பாவிக்கும் பல விடயங்கள் காணப்படுகின்றன. அந்தவகையில், எமது கோப்புகளை இணையத்தில் சேமித்து தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் இலகுவில் பெற்றுக் கொள்ளும் வசதியைத் தருகின்ற Dropbox என்ற இணைய-நிலைச் செய்நிரலும் Cloud Computing இன் பிரயோகமாகும்.

இந்த Dropbox இன் மூலம் கோப்புகளைச் சேமித்து வைத்தல், பகிர்தல் என்ற செயற்பாடுகளைத் தாண்டியும் பல இன்னோரன்ன நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவற்றுள் சிலவற்றை நாம் இங்கே காண்போம். கூடவே, இந்தச் செய்நிரலின் செயற்றிறனை மேம்படுத்தும் நோக்கோடு இதனோடு சேர்ந்து தொழிற்படும் பல செய்நிரல்களும் காணப்படுகின்றன. இவை Dropbox இன் API ஐப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன.



## அடிப்படை விடயங்கள்

Dropbox ஐப் பயன்படுத்தி உங்கள் கோப்புகளை இணையநிலையில் சேமிக்க முடியும். Windows/ Mac OS மற்றும் Linux போன்ற பணிசெயல்முறைமைகளில் இயங்கும் தகவுள்ள செய்நிரல்களையும் Dropbox கொண்டுள்ளதால், வேறுபட்ட OS பற்றிய கவலைகளே தேவையில்லை. அத்தோடு, அதன் இணைய இடைமுகத்தின் மூலம் எந்த இணைய உலாவியைப் (Browser) பயன்படுத்தியும் கோப்புகளை Dropbox கணக்கில் சேர்த்துக்கொள்ள முடிவது சுவை.

இந்தச் சேவையில் நீங்கள் இணைந்து கொண்டதும், உங்களுக்கு இலவசமாக 2GB அளவுள்ள சேமிப்பகம் வழங்கப்படும். அத்தோடு, இந்த அளவை நீங்கள் அதிகரித்துக்கொள்ளவும் முடியும். அதுவும் இலவசமாகத்தான்.


உங்கள் நண்பர்களை Dropbox இல் இணைய அழைப்பதன் மூலம், உங்கள் கணினியை உங்கள் கணக்குடன் இணைப்பதன் மூலம், புதிய கோப்புகளை உங்கள் கணக்கில் சேர்ப்பதன் மூலம் என இலவச சேமிப்புக் கொள்ளளவை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியங்கள் ஏராளம். நண்பர்களை சேவைக்கு இணைப்பதன் மூலம் 8GB வரையான சேமிப்பு கொள்ளளவை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்தோடு, உங்கள் கோப்புகளை நவீன ரக கையடக்கத் தொலைபேசிகளிலிருந்தும் (iPhone) உங்கள் கணக்கிற்கு இணைத்துக்கொள்ள முடியும். அத்தோடு, குறித்த கையடக்கத் தொலைபேசியிலிருந்தே உங்களின் கோப்புகளை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

## காற்றிலே கவிதை

உங்கள் நண்பரிடமிருந்து ஒரு கோப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதன் கொள்ளளவோ மிகப் பெரியது. மின்னஞ்சலில் இணைத்து அனுப்ப முடியாது. இந்த நிலையில் என்ன செய்வீர்கள்? அதற்கு இருக்கவே இருக்கிறது AirDropper என்கின்ற Dropbox உடன் சேர்ந்தியங்கும் செய்நிரல்.

இந்தச் சேவையைப் பயன்படுத்தி நீங்கள் குறித்த நண்பரிடம் கோப்பைப் பெறுவதற்கான தேவை அறிவிக்கலாம். அவரும் குறித்த செய்நிரல் அனுப்பிய இணைப்பின் மூலம் அந்த கோப்பினை உங்கள் கணக்கிற்குச்




சேர்க்கலாம். அவ்வளவுதான். உங்கள் Dropbox கணக்கில் உங்களுக்குத் தேவையான கோப்பு வந்து சேர்ந்துவிடும். கோப்பு சேர்க்கப்பட்ட செய்தியையும் இனிப்பான மின்னஞ்சலாக AirDropper அறிவிக்கும் என்பது கவிதை.

## நீ காப்பாய்!

முக்கியமான கோப்புகளை காத்தல் என்பது எல்லோரும் அதிகம் சிரத்தை கொள்கின்ற விடயந்தான். குறிப்பாக, எதிர்பாராத விதமாக கணினி கதிகலங்கிப் போய், செயலற்றுக் கிடக்கின்ற நிலையில், அதிலுள்ள கோப்புகளை மீள அப்படியே எடுப்பது கடினமானதும், அதிகம் நேரம் பிடிப்பதுமான காரியம்.

இப்படியான தருணங்கள் ஏற்படாமல் தடுக்க இறுவட்டுகள் (CD) மற்றும் USB Flash Driveகளில் எமது முக்கீயமான கோப்புகளை சேமித்து வைப்பது வழக்கமானது. இன்னும் சிலரோ மின்னஞ்சலில் குறித்த கோப்பை சேமித்து வைப்பர். ஆனால், கோப்பின் அளவு மற்றும் பண்பு சார்பான வரையறைகளால் எல்லா கோப்புகளையும் மின்னஞ்சலில் சேர்த்து விட முடியாது. இதற்கான மிக அழகிய தீர்வு Dropbox தான். Dropboxஐ நம்பியோர் drop ஆக்கப்படார்!

## ஆசையில் ஓர் கடிதம்

சிலவேளைகளில், பெரியளவான கோப்புகளை உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்கள் உங்களுக்கு மின்அஞ்சலில் அனுப்பி வைப்பர். அவை மின்னஞ்சலின் சேமிப்பக கொள்ளவை அபகரித்துவிடும். ஆனாலும், அவர்கள் அனுப்பிய அந்தக் கோப்புகளை வெறுமனே அழித்து குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட முடியாது. இந்த நிலையில் என்ன செய்யலாம்.

MailDrop, உங்கள் உறவினர், நண்பர்களின் ஆசையான மின்னஞ்சல்களில் இணைக்கப்பட்ட பெரியளவான கோப்புகளை உங்கள் Dropbox கணக்கிற்கு தன்னியக்கமாகவே மாற்றிவிடும் காரியத்தை செய்துவிடுகிறது. இந்தச் செய்நிரலானது, Windows பணிசெயல்முறைமையில் மட்டுமே தற்போது இயங்குகிறது. ஆனாலும், ஏனைய பணிசெயல்முறைகளுக்கான பதிப்-புகளும் வெளிவரும் காலம் வெகு தொலைவி-லில்லை.

## நீதான் என் தேசிய கீதம்

இணையத்தளத்தை உருவாக்குவது, அதனை இணையத்தில் இணைப்பது என்பதெல்லாம் ஒரு காலத்தில் மிகப்பெரிய விடயங்கள். ஆனால், காலச்சக்கரத்தின் வேகமான சுழற்சி எல்லாவற்றையும் ஓரளவிற்கு இலகுவாக்-கியிருக்கிறது. வலைப்பதிவுகள் தொடங்க எண்ணிய மாத்திரத்திலேயே, மிக இலகுவாக அதனை உருவாக்கி அவற்றில் உங்கள் கருத்துகளைச் சேர்த்துவிட முடியும். இதற்கு துணை புரியும் தளங்களாக, Blogger மற்றும் WordPress.com தளங்களைக் குறிப்பாகச் சொல்லலாம்.

ஆனாலும், நீங்கள் ஒவ்வொரு எழுத்தாக அழகு பார்த்து செய்த உங்கள் அழகிய HTML மூலம் செய்யப்பட்ட இணையத்தளம் இணையத்தில் எப்படியிருக்குமென பார்க்கவேண்டுமென்றால், குறித்த HTML கோப்புகளை இணையத்தில் எங்கே இலவசமாக சேர்க்கலாம் என்ற கேள்வி எழுகிறதல்லவா?

இதைச் சாத்தியமாக்கும் பல சேவைகள் இணையப்பரப்பில் இருந்தாலும், உங்கள் Dropbox இன் Public Folder ஐ இணையத்தளத்தை சேமித்துவைப்பதற்கான இடமாகப் பயன்படுத்தலாம். Public URL ஐப் பெறுவதன் மூலம், உங்கள் இணையத்தளத்தை சாதாரண இணையத்தளமொன்றைப் போல் உலாவலாம். ஆச்சரியங்கள் தரும் சாத்தியங்களின் ஆரம்பம்தான் இந்த Dropbox. பரீட்சார்த்தமாக இணையக் கோப்புகளை பரிசோதனை செய்ய உகந்த இடம்.

இங்கு HTML, JavaScript போன்ற இணைய நிலை மொழிகளை கோப்புகளில் பயன்படுத்த முடியும். ஆனாலும், PHP போன்ற மொழிகளைக் கொண்ட கோப்புகளுக்கான சாத்தியங்கள் Dropbox இல் இணையநிலை பாதுகாப்பு கருத்திற்கொண்டு Enable ஆக்கப்படவில்லை ■

**பிரித்தானியாவிலிருந்து தாரிக் -**
www.puthunutpam.com




# புதியவர்களுக்கு Microsoft Word2003



ஆவணத்தில் தட்டச்சு செய்த பந்தி ஒன்றைத் தெரிவுசெய்து நமக்குத் தேவையான விதத்தில் எவ்வாறு மாற்றங்களைச் செய்யலாம் என்பது பற்றி ஜனவரி இதழில் ஆராய்ந்தோம். தட்டச்சு செய்த ஆவணம் ஒன்றில் ஒளிப்படங்களை எவ்வாறு இணைப்பது என்பது பற்றி இம்முறை பார்க்கலாம்.

மைக்ரோசொ∴ப்ட் வேர்ட் 2003ல் Insert Menuல் உள்ள Picture எனும் Sub Menuல் அடங்கியிருக்கும் 8 வகையான கட்டளைத் தொகுதிகளைக் கொண்டு ஒளிப்படங்களை சிறப்பான முறையில் கையாளலாம். இதே வேலையை




Drawing Bar ஐக் கொண்டும் செய்ய-முடியும். இவற்றைப் பற்றிச் சற்று விரிவாகக் காண்போம்.

முதலில் தட்டச்சு செய்த ஆவணத்தைத் திறந்துகொள்ளுங்கள். Insert ⟶ Picture கட்டளைத் தொகுதியினுள் சென்று உள்ளிணைக்கவேண்டிய படத்தைத் தேர்ந்தெடுக்கலாம். இதில் முதலாவதாக Clip artல் தொடங்கி From File, From Scanner or Camera, New Drawing, Auto Shapes, Word Art, Organization Chart , Chart வரையுள்ள தெரிவுகளில் உங்களுக்குப் பொருத்தமானதைத் தெரிவுசெய்யலாம்.

Clip Artஆனது பொதுவாக கோட்டோ-வியமாக அல்லது வரையப்-பட்டவையாகவே காணப்படும். அவற்றில் பல உட்பிரிவுகளாக ஒவ்வொரு துறைசார்ந்த ஓவியங்கள் அடுக்கப்பட்டிருக்-கும். நாம் விரும்பும் ஒளிப்-படத்தில் சுட்டியைக் கொண்டு தெரிவுசெய்யும்போது அந்தப் படமானது நம் சுட்டிய இடத்தில் இணைக்கப்படும். மேலதிக படங்கள் தேவைப்-படின் இணையத்தில்




பதிவிறக்கம் செய்து கொள்ள Clipart on Office Online இணைப்பு உதவுகிறது. Clipart ஒன்றினை ஆவணத்தில் இணைத்த பின் உள்ள தோற்றம் கீழ்கண்டவாறு அமைந்திருக்கும்.





The main computer box is made of several computer hardware components and subcomponents which include:

- The case - The outside component which provides protection for the parts inside and provides a fan and power supply which are used to both cool the working parts inside and provide power to them.
- The motherboard - Hold the following computer hardware subcomponents:
  - Memory - Used to provide temporary storage of information as discussed earlier.
  - Microprocessor - Used to provide the processing of data function as discussed earlier.

அடுத்ததாக உள்ள From File கட்டளையின் மூலம் எமது கணினி வன்தட்டில் (Hard Disk) பதிந்து வைத்துள்ள ஒளிப்படங்களை ஆவணத்தில் இணைக்க முடியும். Insert⟶ Picture ⟶From File மூலம் உங்களுடைய கணினியில் தோன்றும் கட்டளைத் தொகுப்பில் (படம் 1) தேவையான படத்தினை சுட்டி மூலம் தேடித் தெரிந்து கொண்டு Insert கட்டளையைக் கொடுங்கள். இப்பொழுது நீங்கள் தெரிவு செய்த ஒளிப்படமானது ஆவணத்தில் காட்சியளிக்கும். (படம் 2)


மூன்றாவதாக உள்ள From Scanner or Camera கணினி-யில் இணைக்கப்பட்ட உள்ளீட்டுக் கருவிகளான






(படம் 1)

ஸ்கானர் அல்லது கமரா மூலமாக ஒளிப்படங்களை கணினியில் உள்ளீடு செய்து ஆவணத்திற்குள் கொண்டு வருவதற்கு உதவும்.




New Drawing கட்டளை ஆவணத்தில் நமக்குத் தேவையான படங்களை Autoshapeல் Linesஐக் கொண்டு வரைந்து இணைப்பற்கு உதவுகிறது.




The main computer box is made of several computer hardware components and subcomponents which include:

- The case - The outside component which provides protection for the parts inside and provides a fan and power supply which are used to both cool the working parts inside and provide power to them.
- The motherboard - Hold the following computer hardware subcomponents:


(படம் 2)


- Memory - Used to provide temporary storage of information as discussed earlier.
- Microprocessor - Used to provide the processing of data function as


இதேபோன்று, குறிப்பிட்ட சில வடிவங்களை உள்ளடக்கிய தொகுப்பையே நாம் Auto shapes என்கிறோம். இதில் உள்ள 8 தலைப்புகளுக்கு ஏற்றாற்போல் வடிவங்கள் நிரல்படுத்தப்பட்டிருக்கும். தேவையான வடிவத்தைத் தெரியும்போது எமது ஆவணத்தில் படங்களை வரைவதற்கான Drawing Box ஒன்று தோன்றும். இதைப் பயன்படுத்தும்-





போது நாம் குறித்த எல்லைக்குள் படங்களை கையாள முடியும். மேலும் இந்த Box தேவைப்படாதவிடத்து Esc அல்லது Delete விசையினை அழுத்தி இந்த பெட்டியினை நீக்கிவிடலாம். (ஆவணத்தினுள் இணைக்கப்பட்ட ஒளிப்படங்களை கையாள்வது பற்றி பிற்பகுதியில் காண்போம்).








Auto Shape கட்டளையில் உள்ள ஏதாவது ஒரு வடிவத்தினை சுட்டி மூலம் தெரிந்து கொள்ளும்போது ஆவணத்தினுள் ஒரு கட்டம் தோன்றும். அதனுள் நாம் சுட்டியை ஒரு இடத்தில் வைத்து இழுக்கும்போது நீங்கள் தெரிந்துகொண்ட வடிவமானது விரும்பும் அளவில் கிடைக்கும்.



வரையும்போது உருவத்தின் நீளம் மற்றும் அகலம் போன்றவை சுட்டியின் அசைவுகளுக்கு ஏற்றாற்போல் மாறுபடும். அதை விடுத்து சரியான உயரம் அகலம் ஒரே அளவாக வரவேண்டுமெனில் Shift விசையினை அழுத்திக்கொண்டே வரையவேண்டும். மீதமுள்ள கட்டளைகளினைப் பற்றி அடுத்த இதழில் விரிவாகக் காண்போம். ■

**[உங்கள் சந்தேகங்களை Sikaramthodu@gmail.comக்கு எழுதி அனுப்புங்கள்]**

**- அ.பெஸ்ரியன்**





# PHOTO SHOP இல் எடிட்டிங்


ஒளிப்படங்களை வர்ணத்தின் அடிப்படையில் தெரிவுசெய்வதைப்பற்றி கடந்த இதழில் பார்த்தோம். இந்தப் பகுதியில் ஒளிப்படத்தில் நமக்குத் தேவையான பகுதியை மட்டும் தெரிவுசெய்ய போட்டோஷொப்பில் பயன்படுத்தப்படும் Pen Toolஜப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

ஒளிப்படங்களை வெட்டுவதற்கு பல்வேறு வழிமுறைகளை கடந்த பகுதிகளில் அறிந்துகொண்டோம். அடுத்ததாக நாம் காணவிருக்கும் Pen Tool ஆனது, மிகவும் நேர்த்தியாகவும் அதேசமயம் நம் விருப்பத்துக்கு ஏற்றாற்போலும் ஒளிப்படங்களை வெட்டுவதற்கு உதவும் Tool ஆகும்.


இது போட்டோஷாப் Tool barல் 17 வதாக அமைந்துள்ளது. இதனுள் 5 விதமான tools உள்ளன. இதன் குறுக்குவழி (Shortcut) P. Pen tool ஐத் தெரிவு செய்யும்போது Option Barல்




உள்ள தெரிவுகளான Shape layers, paths, fill pixels முதல் தொகுப்பாகவும் Pen





tool , free form pen tool, Rectangle tool, Rounded rectangle tool, Ellipse tool,




polygon tool, line tool, Custom tool ஆகியன இரண்டாவது தொகுப்பாகவும் Auto Add/Delete மூன்றாவது Checkbox தெரிவாகவும் Add to path area (+), Subtract vfrom path area (-), Intersect path areas, Exclude overlapping path areas நான்காவது கட்டளைத் தொகுப்பாகவும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

முதலில் Pen toolஜப் பயன்படுத்தி எவ்வாறு ஒளிப்படத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவுசெய்து பிரிதெடுப்பது என்பதைப் பார்ப்போம்.






ஒளிப்படத்தை தேவையான உயர அகலங்களைக் கொடுத்து திறந்துகொள்ளுங்கள். நான் கீழே காட்டியுள்ள ஒளிப்படத்தில் கண்ணாடி கோப்பையைத் தனியாக வெட்டி எடுக்கப்போகின்றேன்.


**குறிப்பு:** Pen tool தெரிவுசெய்யப்பட்டவுடன் 2வது கட்டளைத் தொகுதியிலுள்ள 1வது தெரிவுவான Shape Layers நாம் வரைவதற்கு ஏற்றாற்போல் வர்ணங்களை நிரப்பும் பணியைச் செய்கிறது. 2வது தெரிவான Paths ஆனது நாம் கோடுகள் வரைந்து தெரிவுசெய்வதற்கு உதவுகிறது. இப்போது நமக்குத் தேவையானது 2வது தெரிவாகும்.


Pen toolஜத் தெரிவு செய்துகொண்டு படத்தில் காட்டியுள்ளவாறு நமக்குத் தேவையான பகுதியில் எங்கேனும் ஒரு மூலையில் முதல் புள்ளியினை (Point A) சுட்டி மூலம் கிளிக் செய்யுங்கள். இதிலிருந்து அடுத்த புள்ளியான (Point B)யினை கிளிக் செய்து கொண்டு சுட்டியை விடாமல் ஏதேனும் ஒருபக்கமாக (மேல் / கீழ்) இழுக்கும் போது (Point B)ல் இருந்து ஒரு கோடு குறுக்குவெட்டு கோடாக வரும். அந்தக் கோட்டின் இருபுள்ளிகளை (Handle) H1 மற்றும் H2 எனவும் அதேபோல் P1 மற்றும் P2க்கு இடைப்பட்ட கோட்டை Path எனவும் குறித்துள்ளேன்

இந்த இரண்டு புள்ளிகளையும் (Alt) விசையினை அழுத்-திக்கொண்டு நாம் வரைந்த கோட்டின் வடிவத்தினை மாற்றி அமைக்கலாம். தொடர்ந்து (Point B) ஐ Alt விசையுடன் கிளிக் செய்யும் போது (H1, H2) ஏதேனும் ஒரு Handle மறைந்து (Point B) ஆனது அடுத்து கோட்டினை வரைவதற்கு (Point A) யாக மாற்றமடையும்.









இதைக்கொண்டு அடுத்த கோட்டுக்கான (Point B) ஐத் தெரிந்துகொண்டு வேண்டியவாறு கோட்டினை வரையலாம். இவ்வாறு தொடங்கிய இடத்திற்கே (Points)ஐ தொடர்ந்து கொண்டு வந்து முடிக்க வேண்டும்.




ஒவ்வொரு (Points)ஐயும் கொடுத்துக்கொணடு வரும்-போது ஏதேனும் ஒரு Point அதிகமாக தேவைப்படின் அல்லது குறைக்கவேண்டி இருப்பின் Pen Toolல் உள்ள மற்றைய தெரிவுகளான Add Anchor PointToolம் Delete Anchor Point Toolம் உதவுகிறது.


பின் (Ctrl+Enter) விசைகளைத் கொடுக்கும் போது நீங்கள் வரைந்த கோட்டோவியமானது தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் வரியாக மாறும். பின் Select Inverse மூலம் தேவையற்ற ஒளிப்படத்தின் பின்புலத் தினை நீக்க விடலாம்.



இதேபோன்று தெரிவுசெய்யப்-பட்ட பகுதிகளுக்கு நிறம் மற்றும் ஒளி அமைப்புக்களை-யும் மாற்றலாம். Convert Point Tool ஆனது தொடக்கத்தில் கொடுக்கப்பட்ட Point ஐ Pen Toolன் இந்த தெரிவானது திருத்தி அமைக்க வல்லது.


அடுத்த தெரிவான Freeform Pen Tool ஆனது எளிமையாக கோடுகளை தொடர்ந்து வரைவதற்கு உதவுகிறது. மேலே குறிப்பிட்டதினைப் போன்றே தொடக்கப் புள்ளியான சுட்டி மூலம் கிளிக் செய்து தொடர்ந்து சுட்டியினை ஒரு குறிப்பிட்ட வடிவம் அடிப்படையில் இழுக்கும் போது நமக்கு உகந்தாற்போல் தெரிவு கிடைக்கும். இது பென்சிலால் ஓவியம் வரைவது போன்ற செயல்முறையாகும்.

அதேபோல் இந்த Transform Pen Toolஐ Click செய்வதன் மூலம் கிடைக்கும் Option Barல் உள்ள Magnetic Check Box Optionன் சரியிடும் போது நாம்






வரைவதற்குப் பதிலாக நிற அடிப்-படையில் ஒளிப்படத்திலுள்ள உருக்க ளினை தானே தேர்ந்தெடுப்-பதற்கு உதவுகிறது. முதல் Point Click செய்யப்பட்டதி-லிருந்து நாம் தெரிவு செய்த உருவி-னைச் சுற்றி சுட்டியினை கொண்டு செல்வதின் மூலம் நாம் எளிமையாக ஒளிப்படத்தில் தேர்ந்தெடுக்க முடியும்.

Pen Toolலின் Option Barல் உள்ள 3வது கட்டளைத் தொகுப்பானது செவ்வகம், வட்டம்,





அறுங்கோணம் மற்றும் கோடுகள் போன்றவற்றினை வரைவதற்கு உதவும் Tools ஆகும். இந்த வடிவங்களில் ஏதேனும் ஒன்றினைத் தெரிவு செய்து நாம் திறந்து வைத்துள்ள கோப்பில் எங்கேனும் ஒரு இடத்தில் click செய்து இழுக்கும் போது நீங்கள் தெரிவு செய்த வடிவம் கோட்டோவியமாக காட்சியளிக்கும் இதனை Ctrl + Enter விசைகளினை






அழுத்தி தெரிவு செய்யலாம். தெரிவு செய்யப்பட்ட வடிவங்களுக்கு வர்ணத்தினை கொடுப்பதற்கு போட்டோஷாப்பில் Toolboxல் காணப்படும் Foreground




Background Colorல் ஏதேனும் ஒன்றினை (Click) தெரிவு செய்யும் போது புதிதாக ஒரு Color Picker தோன்றும் இதில் தேவையான வர்ணத்தினை click செய்யும் போது பிறிதொரு வர்ணத்தினை நீங்கள் தேர்ந்தெடுக்கும் வரை நீங்கள் தேர்ந்தெடுத்த வண்ணமாக போட்டோஷாப் நினைவகத்தில் சேமித்து வைத்திருக்கும். அதேபோல் F6 விசையினை அழுத்தி Color Paletteஐ பயன்படுத்-தியும் வர்ணத்தினை தேர்ந்தெடுக்கலாம். அதன் பின் Edit Menuக்குச் சென்று Fill கட்டளையின் மூலம் தேர்தெடுத்த வடிவத்தினை வர்ணத்தால் நிரப்பவும் Edit Menu ⟶ Stock கட்டளையின் மூலம் வடிவத்தின் விளிம்புகளுக்கான வர்ணத்தினையும் கொடுக்க முடியும். இதனைப் பற்றி தொடர்ந்து அடுத்த இதழில் காணலாம்.

எழுதப்படும் கட்டுரைகளை பலமுறை வாசித்தல் மற்றும் இடைவிடாத பயிற்சி மூலமாகவே இத்துறையில் நிபுணத்துவம் பெற முடியும் ■

**- அ.பெஸ்ரியன்**

எங்கு பார்த்தாலும், HTML5 பற்றிய பேச்சாகவே இருப்பதை நீங்கள் அவதானித்திருக்கக்கூடும். "இனி Video ஐ Play பண்ண Flashஐ install பண்ணத் தேவை-யில்லையாமே! இப்ப HTML5 வந்திருக்காமே!" என்று இணைய ஆர்வலர்கள் சொல்வதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். சரி. அப்படியா - னால், HTML5 என்றால் என்ன?

**உயிரும் நீயே உறவும் நீயே!** இணையத்தின் அழகிய நிலைக்கு ஆதாரமாய் இருப்பது

**என்ன விலை அழகே!?** "பழைய இணைய உலாவிகள் இந்த HTML5 க்கு தங்களை தயார்படுத்தாத நிலையில், நான் இதனை எவ்வாறு பாவிக்க முடியும்?" என நீங்கள் கேட்கக் கூடும்.

HTML5 என்பது ஒரு தனியான விடயமல்ல. பல தனியான குணாதிசயங்களின் தொகுப்பு என்று கூட சொல்லிவிடலாம். வெறும், அடையாள ஒட்டுக்கள் (tags) மற்றும் கோண அடைப்புகள் (angle brackets) என்பவற்றாலானதே HTML என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனாலும், HTML5 ஆனது, அதற்கும் மேலாக,




HTML எனகினற HyperText Markup Language என்பது தான். நீங்கள் இணைய உலாவியில் பார்க்கும் இணையப் பக்கமொன்று அழகுற தோற்றமளிக்கக் காரணமான பல நிலைகள் உண்டு. அதில் முதன்--மையானது, HTML என்ற இணைய மொழியாகும்.

இதன் அடிப்படையிலிருந்தே இதர இணைய நிலை சார்ந்த மொழிகள் ஆட்சி செய்கிறது. ஆக, இணையப்-பக்கத்தின் தோற்றம், அமைவு போன்றவற்றை நெறிப்படுத்தும் மொழியாக HTML ஐக் கண்டு கொள்ள முடியும்.

HTML இன் பரிணாமத்தில் இறுதியாக வந்துள்ள அதன் பதிப்புத்தான் HTML5 என்பதாகும். ஒவ்வொரு பதிப்பிலும், புதிய பல குணாதிய சங்களை அறிமுகப்படுத்தி வெளிவரும் HTML, இந்தந் தடைவை கொஞ்சம் அதிகமாகவே, பலரும் ஆச்சரியமாய் பார்க்கின்ற வகையிலான குணாதிசயங்களைக் கொண்டு வருகிறது.

இனி நீங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய HTML5 பற்றிய ஐந்து விடயங்களைப் பார்ப்போம்.

துயஎயளஉசவைவ ஊடாக DOM (Document Object Model) இடைத்தொடர்பாடல் செய்கிறது. இந்த ஏற்பாட்டால், HTML5 ஐப் பயன்படுத்தியே பல உன்னதமான இணைய நிலைச் செய்நிரல்களை உருவாக்க முடிவது அழகு.

**ஓடும் தண்ணியிலே பாசியில்லையே!** நீங்கள் என்னதான் சொன்னாலும், நாம் இதுவரை பாவித்து வருகின்ற HTML 4 கூட அழகான இணையத்தின் அத்திவாரமாகத்தான் இருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. அதன் வெற்றியின் ஆர்வத்திலும், அடிப்படையிலும் உதிப்பதே இந்த HTML5. ஆக, புதிதாக ஒன்று வந்துவிட்டது என்பதற்காய் பழைய விடயங்களை மறந்துவிடவோ, எறிந்துவிடவோ தேவையில்லை. உங்கள் இணையச் செய்நிரல் HTML 4 இல் நேற்று செயற்பட்டதானால், இன்று அது HTML5 இல், செயற்பட்டே தீரும்.

**அழகு நிலவே, கதவைத் திறந்து அருகில் வாராயோ!**

"இந்த HTML5 ஐ நான் எப்படி எனது இணையப் பக்கத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம்?" என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். பொதுவாக HTML இன் பழைய பதிப்புகளில் எந்த Doctype ஐ பயன்படுத்துகிறோம் என குறித்துக் காட்டுவோம். சரியான doctype ஐ தெரிவது அவ்வளவு இலகுவான காரியமுமில்லை. ஆனால், HTML5 இல், ஒரேயொரு doctype தான்.

இப்படி doctype ஐ உங்கள் பழைய HTML கோப்புகளில் மாற்றிவிடுவதால் உங்கள் இணையப் பக்கம் இனிதே






தொழிற்படும். அத்தோடு, புதிய HTML5 இன் அழகிய நிலைகளை நீங்கள் சேர்க்கும் தகவு உண்டாகும்.

**நீயொரு காதல் சங்கீதம்**

நீங்கள் உருவாக்கின்ற இணையச் செய்நிரல்-களில் canvas, video, audio, local storage போன்றவற்றை பயன்படுத்த நினைத்தால், இருக்கவேயிருக்கிறது HTML5. இன்றைய நிலையில் முன்னணி இணைய உலாவிகளான, Chrome, FireFox, Safari, Opera மற்றும் பல கையடக்கச் சாதனங்களின் உலாவிகள் என அனைத்தும் HTML5 ஐ தாங்கிக் கொள்ளும் நிலையில், பலப்படுத்தப்பட்டுள்ளது. அது-மட்டுமா, புதிய தொழில்நுட்பங்களை தங்கள் உலாவியில் இணைத்துக் கொள்வதை ஆதரிக்-காத, அடம்பிடிக்கின்ற Microsoft கூட தங்களின் Internet Explorer 9 பதிப்பில், HTML5 இன் பல குணாதிசயங்களை ஆளும் தகவுள்ள நிலையை இணைக்கவுள்ளதாக தெரிவித்து உள்ளது. இனியென்ன..?

HTML5 இன் மூலம் செய்யக்கூடிய வித்தைகள் ஒன்றிரண்டல்ல. அவை எண்ணிலடங்காதவை. இணைய எதிர்காலம் பற்றிய அழகிய கவிதை-யாய் HTML5 ஐ கண்டுகொள்வது தவிர்க்க முடியாததே!

சரி. அப்படியானால், இந்த HTML5 ஐக் கொண்டு பலப்படுத்தப்பட்ட இணையத்தளங்கள் உருவாக்கபட்டுள்ளனவா? என்ற கேள்வி உங்க-ளுக்கு எழலாம்.

பல இணையத்தளங்கள் அழகிய நிலையில் உருவாக்கப்-பட்டு இருப்பது நீங்கள் அறிய வேண்டிய போனஸ் தகவல். இதோ அருகே ஒரு இணையபக்கம் உங்க-ளின் அழகிய அனுபவத்திற்காக. HTML5 கொண்டு பலப்படுத்தப்பட்ட இணையத்தளங்களின் காட்சியகம்.

இணையத்தில் இன்றே எதிர்காலத்தைக் கண்ட பூரிப்பு உங்களிடம் உருவாகிவிட்டதா? ■

**பிரித்தானியாவிலிருந்து தாரிக் -**

**நன்றி: புதுநுட்பம்**

---

**'அமெரிக்கன் சென்ரர்' நடாத்தும்**

# புகைப்பட போட்டி – 2011

12-18 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே 3 பிரிவின் கீழ் இப்போட்டி நடாத்தப்படுகிறது.

பிரிவுகள்: **12-14, 15-16, 17-18**

**மையக்கரு:** ஒரு படம் ஆயிரம் சொற்கள் பெறுமதியா-னது.

**போட்டி விதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

இலத்திரனியல் புகைப்படங்களையோ அல்லது ஒளிப்படப் பிரதிகளையோ அனுப்ப முடியும்.

ஒளிப்படத்தை ஏன் தெரிவு செய்துள்ளீர்கள் என்பதையும் சுருக்கமாக எழுதி அனுப்பவேண்டும்.

ஜுனியர் ஒவ்சேவர் (Junior Observer-Sunday Observer பத்திரிகையின் இலவச இணைப்பிதழ்) பத்திரிகையில் பிரசுரமாகும் இப்போட்டி பற்றிய கூப்பனை நிரப்பி, பாடசாலை அதிபர் / வகுப்பாசிரியரின் கையெழுத்துடன் அனுப்பவேண்டும்.

மின்னஞ்சலூடாக அனுப்புவோர் உங்கள் பெயர், வயது, தொடர்புகொள்ளக்கூடிய விபரங்கள் மற்றும் பாடசாலை, பாடசாலை அதிபரின் பெயர் என்பவற்றையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

வெற்றிபெறும் மாணவர்களுக்கு அமெரிக்க நிலையத்-தின் நூலகத்தில் வாழ்நாள் அங்கத்துவ உரிமை வழங்கப்-படுவதுடன், அமெரிக்கத் தூதரினால் கையெழுத்திடப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும்.

சான்றிதழ் வழங்கும் வைபவம் கொழும்பில் உள்ள அமெரிக்க நிலையத்தில் நடைபெறும்.

போட்டி விதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு: http:// srilanka.usembassy.gov

**தொடர்புகளுக்கு:**

**அமெரிக்க நிலையம், 4, காலி வீதி, கொழும்பு – 3**

மின்னஞ்சல்: **amcentersl@state.gov**

தொ.பே.இல: **0112 498146 / 0112 498169 / 0112 498128**

# உலக வங்கியின் சர்வதேச கட்டுரைப்போட்டி – 2011

திறந்த போட்டியாக நடாத்தப்படும் இப்போட்டிக்கு 18-25 வயதுக்குட்பட்ட மாணவர்கள் மற்றும் மாணவர்களல்லாத இளைஞர்கள் அனைவரும் பங்குபெறலாம்.

**இளைஞர் புலப்பெயர்விற்கான சந்தர்ப்பங்கள், சவால்கள் மற்றும் அதன் உட்பொருளை மையமாக வைத்தே கட்டுரை ஆக்கப்படவேண்டும்.**

நாட்டிலிருந்து வெளியேறும் அல்லது உள்வரும் இளைஞர்களின் கணக்காய்வுகளை வைத்து உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் புலப்பெயர்வின் தாக்கங்-களை அடிப்படையாகக் கொண்ட கட்டுரை ஆக்-கங்களோ அல்லது காணொளி ஆக்கங்களோ ஏற்றுக்கொள்ளப்படும்.


அனைத்து ஆக்கங்களுக்குமான இறுதித்திகதி: மார்ச் 17-2011


தெரிவுசெய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பணப்-பரிசில், பிரான்ஸ் நாட்டில் வைகாசி மாதம் நடைபெறும் ABCDE மாநாட்டின்போது வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**www.essaycompetition.org**

## Arc Mouse (ஆர்க் மவுஸ்):






கடந்த வருடம் செப்டம்பர் மாதம் மைக்ரோசாப்ட் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள வில் வடிவ சுட்டி (Arc Mouse). தற்போது 60 டொலர் மதிப்பில் சந்தையில் விற்கப்பட்டுவருகிறது.

இந்தச் சுட்டியானது 3 முறை மடக்கி வைக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டு உள்ளது. கறுப்பு மற்றும் கருஞ்சிவப்பு நிறங்களில் காணப்படும் இந்த 11 கிராம் நிறையுள்ள சுட்டியானது காந்தம் மற்றும் நீடித்துழைக்கக்கூடிய உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. சிறிதளவு இடத்தையே எடுத்துக் கொள்வதால் எளிதில் எடுத்துச்செல்லக்கூடியதாகவும் உள்ளது.

## Adidas Shoe (அடிடாஸ் சூ):



அடிடாஸ் நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ள இந்த Shoe மற்றைய தயாரிப்புகளில் இருந்து மாறுபட்டு நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. 20MHz புரொசசர் (Processor)ஐ உள்ளிணைத்துள்ளதனால், சப்பாத்து அணிந்துள்ளவரின் அசைவுகள் மற்றும் செயற்பாடுகள் உடனுக்குடன் சேகரிக்கப்பட்டு காலின் வசதிக்கு ஏற்றாற்போல் தானாக மாற்றமடையும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், கம்பியில்லா இணைய இணைப்பினைப் பெற்று ஐபோன் போன்ற சாதனங்களுக்கு பாடல்களை தரவேற்றம் செய்வதுடன், இணைய வானொலி சேவையினை நேரடியாக இணைப்புக்கம்பியில்லா ஹெட்போன் மூலம் ஓடிக் கொண்டே கைகளின் உதவியின்றி கேட்டு மகிழவும் முடியும். அத்துடன், விரும்பும் பாடல்களை வீட்டில் உள்ள கணினியில் தெரிவுசெய்துவிட்டால் போதும் இந்த Shoe வில் தானாக தரவிறக்கம் செய்து கேட்டுக் கொள்ள முடியும். இதன் விலை தற்போது சுமார் 250 டொலர் பெறுமதியாகும்.




## Plantronics Voyager Pro + Bluetooth (புளூரூத் ஹெட்போன்):




ஸ்கை நெட்வெர்க் அறிமுகப்படுத்தியுள்ள இந்த நவீன வகை புளூரூத் ஹெட்போன் நமது தொலைபேசிகளில் உள்ள வானொலியினை ஜிபிஎஸ் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி கேட்கக்கூடிய வண்ணம் தருகிறது. மேலுமொருபடி போய் இணையத்தை தொடர்பு (A2DP) கொண்டு மின்னஞ்சல் மற்றும் காலநிலை மாற்றங்களை ஒலி வடிவில் தருகிறது. மேலும் AudioLQ2 தொழில்நுற்பம் மூலம் வெளிப்புற சத்தங்களை முற்றிலும் நீக்கி தெளிவான ஒலியைக் கேட்க உதவுகிறது. சந்தையில் இதன் விலை 96 டொலராகும்.

## Sensor Helmet (சென்சார் ஹெல்மெட்) :



மனிதர்களும், இயந்திரங்களும் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கான எண்ணங்கள் (Sence) மூலம் செயல்படும் நியுரோ டெக்னாலஜி (neuro-technology) எனும் தொழில்நுட்பத்தை முதன்முதலாக சோதனையோட்டம் விட்டுள்ளது எமோட்டிவ் சிஸ்டம் நிறுவனம். இந்த பொறிமுறையானது உணர்விகளைக் கொண்ட தலைக்கவசம் மூலம் மனிதர்களது செயல்பாடுகள், உணர்வுகள் மற்றும் நடவடிக்கைகளைப் பதிவு செய்து கொள்வதுடன், அவற்றைக் கொண்டு உணர்வு மற்றும் அசைவுகளின் மூலம் கணினியை செயல்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனமானது கணினி விளையாட்டுகள் தயாரிப்பதில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.



# வாசிப்பை உயர்த்துவோம்! வாசிப்பால் உயர்வோம்!!

அறிவுக்கும், ஆற்றலுக்கும் வலுச்-சேர்க்கும் விதவிதமான நூல்-களை அது உங்கள் பாடசாலை மற்றும் பொது நூலகங்களுக்கே நேரில் கொண்டு வந்து தருகிறது.

இன்னும், நீங்கள் விரும்பும் வித- விதமான நூல்களை உலகின் எந்தப் பகுதியிலிருந்தாவது தருவிக்கவும், இல்லாதவற்றை உங்களுக்காகப் பதிப்பித்துத் தரவும் சிகரம் தயாராக-வுள்ளது.

*வாசிப்பை உயர்த்துவோம்! வாசிப்பால் உயர்வோம்!!!*

## சிகரம் புத்தகச் சந்தை

புதிய வெளியீட்டு முயற்சிகளிலும், ஏற்கனவே வெளியான நூல்களை மாணவர்களுக்குக் குறைந்த விலையில் பெற்றுத்தரும் முயற்சியிலும் சிகரம் ஊடக இல்லம் ஈடுபட்டுள்ளது.

பின்வரும் நூல்கள் இப்போது சிகரம் ஊடக இல்லத்தினரால் பாடசாலை மற்றும் நூலக மட்டத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.



சந்தை விலை 250/-

நமது விலை 200/-

**விலங்குப் பண்ணை**
(மொழிபெயர்ப்பு நாவல்)



சந்தை விலை 200/-

நமது விலை 160/-


**எதுவுமல்ல எதுவும்**
(கருணாகரன் கவிதைகள்)




சந்தை விலை 450/-

நமது விலை 360/-

**மாணவர் தேசப்படப் புத்தகம்**
(முழு வர்ண இந்தியப் பதிப்பு)




சந்தை விலை 900/-

நமது விலை 720/-

**Word Master Dictionary**
(35,000க்கு மேற்பட்ட சொற்கள்)

இன்னும், உங்களுக்குத் தேவையான எந்த வகையான புத்தகங்கள் என்றாலும், அதை எமக்கு அறியத்தந்தால், மலிவு விலையில் அவற்றைப் பெற்றுத்தரவும், புதிய வெளியீடுகளை மேற்கொள்ளவும் சிகரம் சித்தம் கொண்டுள்ளது.

**சிகரம் ஊடக இல்லம், இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

'வகுப்பில் எத்தனையாம் பிள்ளை?' என்ற கேள்விகள் எல்லாப் பக்கத்திலும் எம்மைத் துரத்துகின்றன.

ஸ்கொலர்ஷிப் பாஸா? ஓ.எல். ரிசல்ட்ஸ் என்ன? கம்பஸ் கிடைக்கேல்லையே? என்று கேள்விகளால் விடாமல் எம்மைத் துளைக்கின்றனர்?

இந்தச் சுற்றிவளைப்புத் தாக்குதலுக்குள் வாசிப்பதற்கு எங்கே நேரம்?

பாடசாலைப் பாடவிதானங்களுக்கும், பரீட்சைக்கு வரும் கேள்விகளுக்கும் அப்பால் எந்த விடயங்கள் பற்றியும்

**தமிழுக்காக போராடிய சமூகம் தமிழ் பாடத்திலேயே ஃபெயிலா?**

அறிந்துகொள்ளாத ஒரு இளைஞர் சமூகமாக இதனால் நாம் உருவாகி வருகிறோம்.

அதுமட்டுமன்றி, எமது தாய் மொழி-யாம் தமிழ் மொழியில் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைகளில் அதிகளவிலானோர் சித்திபெறத் தவறும் அவலமும் இதனால் ஏற்பட்-டுள்ளது.

ஆனால், ஒரு முழுமையான மனித-னாக உருவாகுவதற்கும், பாடசாலை-பல்கலைக்கழக கல்வி முடித்து பொருத்தமான ஒரு தொழில்-வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் வேண்டிய பரந்த பொது அறிவை வாசிப்பின் மூலம் மட்டுமே நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, இப்போது முதலே தினமும் ஒரு மணி நேரத்தையேனும் பாடசாலைப் பாடக் கல்விக்கு அப்பாற்பட்ட பொது வாசிப்புக்காக ஒதுக்குவோம்.

இளையோரான உங்களின் வாசிப்பு ஆர்வத்துக்குத் தீனி போட சிகரம் கைகொடுக்கிறது. உங்கள்

# கைகளால் வினைகள் செய்தார்

- சி.ஜெயந்தி

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழி. 'புல்லில்கூடப் புதுமைகள் செய்வோம்' என்பது நமது கைவினைக் கலைஞர்களின் புதுமொழி. இந்தப் புதுமைகள் பலவற்றை ஜனவரி 10-12 வரையில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற 'காலத்துக்கேற்ற உற்பத்திகள்' கண்காட்சியில் காணக்கிடைத்தது.

நாணல்புல் தும்பு, பனையோலை (பன்னப்) பொருள்கள், ஆடை(நெசவு), பத்திரிகைக்கூழ் ஆபரணங்கள் என்று சுமார் 42 வகையான கைவினைப் பொருள்கள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்துக் கைவினைப் பொருள்கள் மட்டுமன்றி, தென்னிலங்கையின் நுட்பமான பல கைவேலைப்பாடுகளும் இந்தக் கண்காட்சியை அலங்கரித்திருந்தன.

உடைத்து உள்ளீட்டைத் தின்றுவிட்டு எறியும் முட்டைக்கோதிலும் கண்ணைக் கவரும் நுட்பமான அலங்கார வேலைப்பாடுகள் செய்ய முடியும் என்பதை கைவினைக் கலைஞர்கள் இங்கே நிரூபித்துக் காட்டியிருந்தார்கள்.

அல்லாரை (தும்பு), மறவன்புலோ (தும்பு), ஆனைக்கோட்டை (துணியில் கைவேலை), வதிரி (தோற்பொருள்கள்), சரசாலை (பனம்பொருள்கள்), திருநெல்வேலி (விதாதா துணி எம்ப்ரோய்டர், கைத்தறி நெசவு), சங்கானை (தும்பு, மட்பாண்டம், புடவை எம்ப்ரோய்டர்), தெல்லிப்பளை (கடதாசிக் கூழ்), ஊர்காவற்துறை (பனம்பொருள், நாணற்புல்) ஆகிய இடங்களில் 32 கிராமிய அமைப்புக்களில் பயிற்சிபெற்றவர்களின் கைவண்ணங்கள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.






"இஞ்சை உள்ள பொருள்களைப் பார்க்கும்போது எங்கட வீடுகளில அந்தக் காலத்தில இருந்த

தொடர்ச்சி 34ம் பக்கம்





# உற்பத்தியாளரின் உள்ளங்களிலிருந்து...

## ''தும்புத்தடி விளக்குமாறோடையே நிக்கவேண்டிக்கிடக்கு''

**கந்தசாமி உஸாயினி, அல்லாரை தும்புத் தொழிற்சாலை**

தும்புத்தடி, விளக்குமாறு தொடக்கம் கால்மிதி, அழகுப்பொருள்கள் வரையில் இங்கு உற்பத்தி செய்கிறோம். அழகுப் பொருள்கள் செய்வதற்கான செலவு அதிகம். இதனால் விலையும் அதிகரிக்க சந்தைப்படுத்துவதும் சிரமம். எனவே, தும்புத்தடி, விளக்குமாறு போன்ற பொருள்களைச் செய்வதையே இங்குள்ளவர்கள் அதிகம் விரும்புகின்றார்கள். போதிய சந்தைவாய்ப்புக் கிட்டுமானால் இன்னும் அதிகம் செய்யலாம்.

எமது உற்பத்திசாலைக் கட்டடத்துக்கான நிதியுதவியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தந்துதவினார். 200 தொடக்கம் 400 வரையானோர் வேலைசெய்வதால் இன்னும் இடப்பற்றாக்குறை இருக்கிறது.

## ''பள்ளிக்கூடங்களிலை நல்ல கிராக்கி''

**லக்ஸ்மிகாந்தன்**
**வதிரி தோற்பொருள் உற்பத்தி நிலையம்**



கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஒரு கோடி ரூபா நிதியுதவியினாலேயே இந்தத் தோல் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 18 தொழிலாளர்கள் இங்கே பணிபுரிகிறார்கள். கூடுதலான தொழிலாளர்களை சேர்த்துக்-கொள்வதற்கான முயற்சிகளை



மேற்கொண்டுள்ளோம். எனினும் கட்டிட வசதிகள் இன்னும் கிடைக்கவில்லை.எமது உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பு பள்ளிக்கூடங்களிலை அதிகரித்திருப்ப-தால் இன்னும் அதிகம் செய்யலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

## ''ஊரிலையே ஒரு தொழிற்சாலை வேணும்''

**டிலானி குணசிங்கம்**
**மறவன்புலோ தும்புப்பொருள் பயிற்சிபெற்றவர்**

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆரம்ப அறிவைப் பெற்றுள்ளோம். மேலதிகப் பயிற்சிகளும் கிடைத்தால் நல்லது.

10 வருடங்களுக்குப் பிறகு ஊருக்கு (மறவன்புலோ) போயிருக்கிறம். ஊரிலையிருந்து வந்த 20 பேர் போக்குவரத்துப் பிரச்சினையாலை தொடர்ந்து வரேல்லை.

முன்பு 40-50 பேர் வேலை செய்த எங்கடை ஊர் தும்புத் தொழிற்சாலை அழிஞ்சுபோச்சு. எங்கடை ஊரிலேயே ஒரு தொழிற்சாலையைக் கட்டித் தந்தால் நிறையப்பேருக்கு வேலை கிடைக்கும்.

## ''பாக்கீனம், வாங்கினாச் செய்யலாம்?''

**சரஸ்வதி துரைநாயகம்**
**ஆனைக்கோட்டை உயரப்புலம் மாதர் சங்கப் பிரதிநிதி**


நாங்கள் துணியில் (மெசினைப் பயன்படுத்தாது) பூவேலை செய்யும் பயிற்சியைப் பெற்றுள்ளோம். இதற்கு சுமார் 350-450 ரூபா செலவாவதால் இவற்றைச் சந்தைப்படுத்திறது கஷ்டம்.

கண்காட்சிக்கு வந்தவர்கள் ஆவலாக இவற்றைப் பார்த்தார்கள். உரிய சந்தைவாய்ப்பும் இருக்குமானால் இந்தத் தொழிலை எம்மால் சிறப்பாகச் செய்யமுடியும். என்கிறார் சரஸ்வதி.

## ''பனைக்கு நல்ல மவுசு''

**ந. அன்னம்மா**
**சரசாலை பனம்பொருள் உற்பத்தி நிலையம்.**


பெட்டி, கடகம், நீத்துப்பெட்டி, பாய், மூடு பெட்டி, தட்டுப்பெட்டி என்று ஏராளமான பொருள்களை இந்தக் கண்காட்சியில் மக்கள் தேடிவந்து வாங்கினார்கள். பல வர்ண நிறங்களைப் பயன்படுத்திச் (சாய ஓலைகள்) செய்வதால் இவற்றின் அழகும், கவர்ச்சியும் அதிகரித்துள்ளது. பனை உற்பத்திகளின் விலையும் அதிகரித்திருப்பதால் உற்சாகம் இரட்டிப்பாகியி-ருக்கிறது.



பனையோலைக்கும் பனம்பொருள்களுக்கும் பேர்போன தென்மராட்சியில் பனை மரங்கள் நின்ற இடமே தெரியாமல் போய்விட்டதால், வேறு இடங்களிலிருந்து பனையோலைகளைப் பெற்றே எமது தொழிலை செய்யவேண்டியிருக்கிறது.

பொருள்களின்ர ஞாபகந்தான் வருகுது'' என்று பார்ப்போர் வியக்குமளவுக்கு, எமது பாரம்பரியத்தின் செழுமை மிக்க காலங்களுக்கு இந்தக் கைவினைப்பொருள்கள் அவர்களை இட்டுச் சென்றன.


கைவினைப்பொருள் பயிற்சியை வழங்கிய தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பணிப்பாளர் விஜயக்கோன் என்பவரிடம் இந்த முயற்சி பற்றிப் பேச்சுக்கொடுத்தோம்.




"30 வருடகாலமாக யாழ்ப்பாணத்தின் இந்தக் கைவினை முயற்சிகளுக்கு அரச ஆதரவு போதியளவு கிடைத்திருக்கவில்லை.



இப்போது, பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப்புரையின்கீழ் எமது நாட்டின் கைவினைக் கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறோம். இதன்மூலம், எமது நாட்டு உற்பத்திகளையும், உற்பத்தியாளர்களையும் ஊக்குவித்து, அவர்களை உலகுக்கு அறிமுகப்படுத்தி, சிறுதொழில் முயற்சிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்'' என்றார் அவர்.




இரண்டு வருட கைத்தொழில் டிப்ளோமா பயிற்சி ஒன்றை அடுத்த மாதமளவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகவும், இதுதொடர்பான விபரங்களை கண்டுக்குழி காட்டுக்கந்தோர் வீதியிலுள்ள அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் சொன்னார் ■









## மொழியோடு விளையாடு

# ஹாய் சொல்லும் ஹைக்கூ!

ஹைக்கூ என்பது சொல்ல வந்ததை ஒரு ட்விஸ்டோடு இரண்டு அல்லது மூன்று வரிகளில் சொல்லும் ஜப்பானிய கவிதை வடிவமாகும். ஒரு சின்ன மலர் மொட்டு போன்ற குட்டி கவிதை வடிவம் இது.
சிறிய வரிகளில் "சடக்" என்று ஒரு கற்பனையைப் பிடித்து நிறுத்தி, படித்ததும் "அட" என்று சொல்ல வைக்கும். உவமை / உருவகம் இருக்கக் கூடாது.
மூன்றே மூன்று வரிகள்தான். அதாவது Long shot, midshot, close up என்று மூன்று வரிகள். கடைசிவரி அல்லது க்ளோஸ் அப் அல்லது ஸூமில் ஒரு காட்சி உறைதல்/ ஆச்சரியம;/ திகில; / திருப்பம் வேண்டும்.

அறுவடைக்கு பின்னும்
வளர்ந்துகொண்டே இருக்கிறது
வங்கிக் கடன்..

உள்ளே புழுங்குவதைப்
புகையாக வெளியே காட்டும்–
அட . . . செங்கல் சூளை!

விழுந்த மலர் திரும்ப
கிளைக்கு செல்கிறது
வண்ணத்து பூச்சி!

தலையில் வழுக்கை
முகத்தில் கிருதா
இடம் மாற்ற முடியுமா?

சொந்த வீடு சுகமே...
சந்தோஷமாய் ஊஞ்சலாடியது
தூக்கணாங்குருவி..!

மாதத்தில் ஒருநாள்
போர்த்துகிறான் பொன்னாடை
சலூன்காரன்

முறுக்கேறி விறைத்தும்
குழைந்து பாடுகிறாயே
வீணைநரம்பு !

தூக்கம் உண்டு
கனவுகள் இல்லை
கல்லறைகளில்...!

ஊர்வலத்தில் கலவரம்
உயிரிழந்தது
பேருந்து..!

இல்லறம் துறந்து
ஞான மார்க்கம்
மனைவி பெயர் ஞானம்

மரம் வெட்டியவன்
தேடினான்
நிழலை..!

சுத்தம் சோறு போடும்...
சுத்தம் வயிறு..
சோறு..?

உதிர்ந்த நட்சத்திரம்
திரும்பப் பறக்குமோ...
மின்மினி

காற்றே இல்லையே..
கவலைப்பட்டது மனசு
சைக்கிள் பஞ்சர்

என் நெருங்கிய நண்பர் ஒருவர். நன்கு படித்தவர். கொழும்பில் கணினி மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் விற்கும் நிறுவனமொன்றை நடத்தி வருகிறார். இவரது கையில் ஆறாவது விரலாக எப்போதுமே சிகரட் புகைந்துகொண்டிருக்கும்.

"ஏன் இப்படிப் பணத்தையும் செலவு செய்து உடம்பையும் கெடுத்துக்கொள்கிறீர்கள்? இதனால் ஏற்படும் தீமைகள் உங்களுக்குத் தெரியாதா? " என்று கேட்டால், "என்ன செய்வது? வேலைப்பழு காரணமாக மன அழுத்தமும் இறுக்கமும் அதிகம். புகை பிடிப்பதால் அது கொஞ்சம் குறைகிறது" என்று சமாளிப்பார்.

ஆனால், இவை எல்லாம் மனப்பிரமையே தவிர வேறொன்றுமில்லை. உண்மையில் புகைப் பிடிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளாவன:

⚜ அடிக்கடி தொண்டையில் சளி அடைப்பது போன்ற உணர்வு தோன்றுவதால், செருமிக்கொண்டே இருக்க நேரிடும். சிலருக்கு இந்த அடைப்பினால் பேச்சும் தடைப்படும்.

⚜ தொடர்ச்சியான இருமலும், சிலருக்கு ஒற்றைத் தலைவலியும் தோன்றலாம்.

⚜ சிகரெட்டினால் ஏற்படும் துர்நாற்றம், புகைப்பவர்கள் உடைகள், வியர்வை எல்லாவற்றிலும் பரவிவிடுகிறது.



# புகை உயிருக்குப் பகை

இப்போது தொண்டைப் புற்றுநோயாளியாகி சிகிச்சை பெற்று வருகிறார்.

இவரைப்போலவே என்னென்னமோ காரணம் சொல்லி புகைப்பிடிக்கும் ஏராளம் பேரின் நிலைமையும் இப்படியே ஆகிவிடுகிறது.

எதையும் பரீட்சிக்கும் ஆர்வமும், அனுபவிக்கும் ஆசையும் கொண்ட இளைஞர்கள் இதற்கு இலகுவில் அடிமையாகிவிடுவர். நகர்ப்புறக் குடும்பங்களின் வசதி வாய்ப்புக்கள் அதிகமென்பதால், அவர்களின் பிள்ளைகள் இலகுவில் போதை, மது, புகைப்பிடித்தல் போன்ற பழக்கவழக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

பொதுவாகப் புகைப்பிடித்தலுக்கு அடிமையாகப் பல காரணங்கள் உள்ளன.

- இது தமது அந்தஸ்தைக் காட்டுவதாக அல்லது துணிச்சலைக் காட்டுவதாக நினைப்பது.
- அதிக கவலை அல்லது மன உளைச்சலின்போது மன இறுக்கம் குறைவதாகக் கருதுவது.
- பெற்றோர் அல்லது மனைவியிடம் எதிர்ப்புணர்வைக் காட்டும் ஒரு வழியாக இதைக் கருதுவது.
- புகைப்பிடிக்கும் நண்பர்களைத் திருப்திப்படுத்துவ-தற்காகத் தொடங்கி பழக்கத்துக்கு ஆட்பட்டுவிடுவது.
- புகைப்பிடிப்பதன் மூலம் எதையோ சாதிப்பதாக திருப்தியடைவது.

இதனால் ஏனையோருடன் விலகியிருக்க நேரிடுகிறது.

⚜ உதடுகளும் பற்களும் கறைபடிந்து அருவருப்பாகி-விடும். விரல் நகங்கள் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

⚜ நாளடைவில் இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

⚜ புகை பிடிக்கையில் தோன்றும் திருப்தி தற்காலிகமே. பிடித்து முடிந்ததும் மீண்டும் பதட்டமும் இறுக்கமும் தோன்றிவிடும்.

⚜ சளித்தொல்லை, ஆஸ்மா (மூச்சுக்கோளாறுகள்) உண்டாகும்.

⚜ நாக்கின் சுவை நரம்புகள் பாதிப்படைவதால் உணவின் சுவை கெட்டு நாட்டம் குறையத் தொடங்கும்.

⚜ சுவாசப்பை, தொண்டைப் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

⚜ உடலில் நிகோடினின் அளவு அதிகரிக்கையில், சில மருந்துகள் உடலில் வினைபுரிவதில்லை.

இவை எல்லாம் உடல் நலத்தில் ஏற்படக்கூடிய சில கேடுகள்தான்.

இவை தவிர சிகரெட்டிற்காக பெரும் தொகைப் பணத்தையும், அதிகளவு நேரத்தையும் செலவிட நேரிடுகிறது.

காசு கொடுத்து இப்படியொரு வினையை வாங்க வேண்டுமா என்ன? ■

**ந.சதீஸ்**

# இல்லாத பணத்தில் இருப்பதை வாங்கலாம்...!

கையில் காசிருந்தால்தான் எதையும் வாங்கலாம். குறைந்தது வங்கியிலாவது இருக்கவேண்டும். அதுவும் இல்லாவிட்டால்...?



இருக்கவே இருக்கிறது கடன் அட்டை. உங்கள் கையிலோ, பையிலோ, வங்கியிலோ பணம் இல்லாவிட்டாலும், விரும்பிய பொருளை வாங்கிட உதவுகிறது கடனட்டை.

**கடனட்டைகள் என்றால் என்ன?**
பொதுவாக செலவு அட்டையைப் போன்றே இதன் பயன்பாடுகள் இருக்கின்றபோதும், வங்கிக் கணக்கில் பணமில்லாவிட்டாலும் இவ்வட்டையூடாக பணத்தைப் பெறவோ அல்லது பொருள்களை வாங்கவோ முடியும்.

நிரந்தர வருமானம், சிறந்த வங்கி வரலாறு அல்லது நிலையான வைப்பு உள்ளவர்களுக்கு வங்கி வழங்கும் ஒரு சலுகை இதுவாகும். ஆகக் குறைந்தது 18 வயதுடையவராக இருப்பதுடன், நிரந்தர வருமானமாய் 20,000 ரூபாவுக்கு மேல் பெறுபவராக இருக்கவேண்டும்.

உங்களுடைய வருமான வரம்பு அல்லது நிலையான வைப்பின் அளவுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட எல்லைவரை வங்கி இந்தக் கடன் வசதியை வழங்குகிறது. குறிப்பிட்ட கால எல்லைக்குள் (பொதுவாக 45 நாட்கள்) நாம் பெறும் கடனுக்கு வட்டி அறவிடப்படாது. கால எல்லைக்குள் பணத்தை வங்கியில் செலுத்தாவிட்டால் வட்டி அறவிடப்படும்.

கடன் அட்டையைப் பயன்படுத்தி, வங்கி இலத்திரனியல் பணக் கையாள்கைக்குரிய இயந்திரம் உள்ள இடங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடிவதுடன், வங்கியின் தானியங்கி இயந்திரங்களில் பணத்தையும் பெற முடியும்.

கடனட்டைகளிலிருந்து சுலபமாகப் பணம் கிடைக்கிறதே என்றெண்ணி



அளவுக்கு மீறிய செலவுகளை செய்தால், கடனை அடைக்க முடியாமல் வட்டிக்கு வட்டி கட்டித் துன்பப்பட நேரிடும்.

அளவோடு பயன்படுத்தினால் கடனட்டை அருமையானதொரு பணத்துணை. மிஞ்சினால் ஆளைக் கொல்லும் விஷமாகிவிடும்.



## அமுதம் விஷமாகமல் இருக்க...

**1) கடனட்டைகளின் எண்ணிக்கை**
அதிகளவு கடன் அட்டைகளைப் பயன்படுத்துவதைத் தவிரப்பது நல்லது.

**2) உச்ச கடன் எல்லை**
உங்கள் கடனட்டையின் உச்சக் கடன் அளவு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்தால், உரிய காலத்தில் பணத்தை மீளச் செலுத்த முடிவதுடன், தேவையற்ற செலவுகளையும் குறைக்கலாம்.

**3) குறித்த பொருள்களுக்கு மட்டும்**
குறித்த சில பொருள்களை வாங்குவதற்கு மட்டுமே கடனட்டையைப் பயன்படுத்தினால் அனாவசிய செலவுகளுக்குள் சிக்குப்படாமல் தப்பலாம்.

**4) பணத்தை பாவியுங்கள்**
இயலுமானவரை பொருள் கொள்வனவுக்கு பணத்தைப் பயன்படுத்துங்-கள். இது தேவையற்ற சுமையை குறைப்பதோடு கடனட்டையில் செலவளிக்கும் அளவை குறிப்பிட்ட எல்லைக்குள் பேண உதவும்.


**5) ஆசை வார்த்தைகளுக்கு மயங்க வேண்டாம்**
வியாபார நிறுவனங்கள் ஆசை காட்டி மோசம் செய்யும் offers உடன் உங்கள் கடனட்டையை இலக்கு வைத்து அணுகுவார்கள். அவதான-மாக இருக்க வேண்டும்!

**7) நேரத்துக்கு கடனை செலுத்தி விடுங்கள்**
நீங்கள் செலவழித்த பணத்தொகையை உரிய திகதிக்குள் திருப்பிச் செலுத்தக் கற்றுகொள-ளுங்கள். இதன்மூலம் அனாவசி வட்டியைத் தவிர்க்கலாம்.



**8) போலிகளைக்கண்டு ஏமாறாதீர்**
மின்னஞ்சல்களுக்கு வரும் பெரும் பரிசுத் தொகைகள் தொடர்பான போலித் தகவல்களை நம்பி கடனட்டை விபரங்களைக் கொடுத்-துவிடாதீர்கள். உள்ள பணத்தையும் இழந்துவிடுவீர்கள்.

**9) இதுவும் உங்கள் பணம்தான்**
இல்லாத பணத்தைச் செலவுசெய்வ-தால் பயமிருக்காது. ஆனால், மீண்டும் கட்டவேண்டுமே என்பதை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருங்கள் ■



**- ஞா.கிரிசாந்**

அச்சம் என்பது மடமையல்ல. வாழ்க்கையில் முன்னேறுவதற்கும். வாழ்க்கையை செவ்வனேயே அமைத்துக் கொள்வதற்கு அச்சம் சிறிதளவு தேவையே. இதற்காகவே தான் ஔவையார். அச்சம் தவிர் என்றாரேயன்றி அச்சம் வேண்டேல் எனக் கூறவில்லை.

என்ன பிரச்சினை என்பது உங்களுக்குத் தெரிந்து விடுகின்றது.

“கொஞ்சம் எண்ணெய் குறைவாக பாவிக்கின்றேன்.” என்று ஒருவர் நாசூக்காக சொன்னால் அவரது உடல் நலப் பிரச்சினை எத்தகையது என்பது விளங்கிவிடுகின்றது.

ஆனால் அது அளவோடு இருக்க வேண்டும். மிகுந்த பயம் வாழ்க்கையை அனுபவிக்க விடமாட்டாது. வெற்றி தோல்வி பற்றிய அதிக பயம் தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்க விடமாட்டாது. பாதுகாப்பு பற்றிய அசாதாரண பயம் தலைமைத்துவம் ஏற்ப-

# பயம் அச்சம் தவிர்



பாடசாலையில் கல்வி கற்கின்ற ஒரு மாணவன் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய பயம் இருந்தால் தான் நன்கு படிப்பான் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவான்.

தனக்கு அடுத்த நிலையில் உள்ளவன் தன்னை முந்தி விடுவான் என்ற பயம் விளையாட்டுப் போட்டியில் ஒருவனை முன்னேற வைக்கிறது.

பெற்றோர் கோபிப்பார்கள் என்ற பயமொன்றின் காரணமாகவே தன் நண்பர்களுடன் இரவு கேளிக்கைகளுக்கு சென்ற பிள்ளைகள் நண்பர்களை விட்டு வர மனமில்லாமல் வீடு ஏகுகிறார்கள்.

வீதியில் விபத்து ஏற்படலாம் என்ற பயத்தினாலேயே நாம் கார் ஓட்டும்போது கவன சிரத்தையுடன் வாகனத்தை ஓட்டுகின்றோம்.

அதிகம் போவானேன், வீட்டுக்கு வருகின்ற விருந்தினரை காப்பி குடிக்கும்படி கேட்டால், சீனி போடாமல் தாருங்கள் என்பவருக்கு

இவர்கள் எடுக்கும் இக்கவனங்கள் தமது நோய் மேலும் தீவிரம் அடையக்கூடாது அல்லது அந்த நோய் வருவதைத் தவிர்க்க வேண்டும் என்ற பயத்தினாலேயேதான். சட்டத்துக்கு அமைந்த நற்பிரஜைகளாக வாழவேண்டும் என்று மனச்சாட்சிக்கு பயந்து வாழ்கின்றவரிலும் பார்க்க சட்டத்துக்கு

**தெருநாய் ஒன்று ஆவேசமாக வாயைப் பிளந்தபடி உங்களை கழுத்துக் குதறுவேன் என வஞ்சினத்துடன் வருகிறது.**

விரோதமாக நடந்தால் தண்டனை பெற வேண்டும் என்ற பயத்திலே சட்டத்துக்கு அமைய வாழ்பவரின் தொகை பன்மடங்கு அதிகம்தானே. மனது எனும் பொலிஸ்காரனிலும் பார்க்க தெருவில் நிற்கும் பொலிஸ்காரனுக்கு பயந்து கார் ஓட்டும் வேகத்தை நாம் குறைப்பதில்லையா? ஆகவே பயம் என்பது மிக அவசியமானது.

தற்கோ, முன்னின்று செயற்படவோ வேண்டிய துணிவினைத் தரமாட்டாது. மறுமை பற்றிய மிகையான பயம் இம்மையை உய்ப்பதற்கு தடையாக அமையும். உலக வாழ்க்கை வெறும் சடப் பொருள் வாழ்க்கையாக அமைந்துவிடும். இந்த பய உணர்வுக்கு எது காரணமாகிறது?

எமது சிறுநீரகம் இரண்டும், வயிற்று அறையினுள்ளே மேற்பகுதியில் முள்ளந்தண்டின் இருபுறமும் காணப்படுகின்ற அவரை விதை போன்ற அமைப்புடைய கட்டமைப்புக்கள். இவை ஒவ்வொன்றின் முற்புறத்திலேயும் அவற்றி-னிற்கு தொப்பிபோட்டது போன்ற வகையான ஒரு கானில் சுரப்பி உள்ளது. அதனை அதிரினல் சுரப்பி (Adrenal gland) என்பார்கள். கானில் சுரப்பி என்பது அகம் சுரக்கும் சுரப்பி (Endocrine gland) வகையைச் சார்ந்தது. இதனது சுரத்தல் நேரடியாகவே குருதித்



தொகுதியை அடைகின்றமையால் அதன் தாக்கத்தை உடனடியாக விளைவுகள் ஏற்பட முடிகின்றது. இந்த அதிரினல் சுரப்பி சுரக்கும் ஓமோனை அதிரினலின் (adrenalin) என்பார்கள். இதனை ஆங்கிலத்தில் Hormone of fight or flight என வேடிக்கையாக குறிப்பிடுவார்கள்.

தெருநாய் ஒன்று ஆவேசமாக வாயைப் பிளந்தபடி உங்களை கடித்துக் குதறுவேன் என வஞ்சினத்துடன் வருகிறது.

நீங்கள் மூன்று விதமான பிரதி-வினை காட்டலாம். என்ன செய்வது ஏது செய்வது எனத் தெரியாமல் "ஐயோ நாய் நாய்" எனக் கத்திக் கொண்டு அசையாமல் ஒரு சிலை போல நின்று அது இரக்க சிந்தனையுடன் உங்களை ஒன்றும் செய்யாமல் விட்டுப் போனால் "கையும் ஓடவில்லை காலும் ஓட வில்லை" நான் என்ன செய்வது எனப் பின்னர் பிரபாலிக்கலாம்.

இவர்கள் கோழைகள்
இரண்டாவது வகையினர் வேகமாக திரும்புவார்கள் குதிக்கால் பிற்புறத்தில் அடிக்க எடுப்பார்கள் ஓட்டம் வெகுதூரம் போன பின் மூச்சி-ரைக்க திரும்பி பார்த்து நாய் கிட்டடியில் இல்லை என ஊர்ஜிதம் செய்த பின்னர் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். இவர்கள் சமயோசித புத்தியுள்ளவர்கள்.

மூன்றாவது வர்க்கம் அசகாயசூரர்-கள். குனிந்து நிலத்திலிருந்து இரண்டு மூன்று கற்களை எடுத்து நாயை நோக்கி வீசுவார்கள். சந்தர்ப்பம் சரியில்லை இன்னொரு சந்தர்ப்பத்தில் பழி தீர்க்கிறேன். ஏன சபதம் எடுத்து விட்டு நாய் வாயை மூடிக்கொண்டு வாலை கால்களுக்கிடையில் வைத்தபடி வந்த வழியே திரும்பி ஓடும்.

மேற்படி செயற்பாடுகளிலே பின்னைய இரண்டுக்கும் தேவை-யான அதிரினலின் என்ற ஓமோன்.

அண்மையில், ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் உடற்றொழிலி-யல் பேராசிரியர் மின் சுஹோ (Min Zhuo) என்பவர் இந்த பய உணர்வுகளுக்குரிய மையத்தை தான் கண்டுபிடித்துள்ளதாக கூறியு-ள்ளார். இது எமது மூளையிலே நெற்றிக்கு எட்டு சென்ரிமீற்றர் தூரத்திலே அமைந்துள்ளதாக அவர் சொல்கிறார். இதனை Anterior Cigulate Cortex (ACC) முற்புற அரைவளைய மேற்பட்டை என அழைக்கின்றார். இந்த மேற்பட்டையின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய மருந்து வகைகளை விரைவிலே கண்டுபி-டித்தால் முற்றாகவே பயமெனும் உணர்வை அகற்றி விடலாம். ஏன அப்பேராசிரியர் கூறியுள்ளார். இது சில சமயம் ஆபத்திலும் போய் முடியலாம் என்றாலும் பயத்தினால் ஏற்படுகின்ற பதகளிப்பு (Anxiety) அச்சக்கோளாறு(Phobia) போன்ற நோயை அறவே ஒழிப்பதற்கு இவை உதவலாம்.

**ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் உடற்றொழிலியல் பேராசிரியர் மின் சுஹோ (min zhuo) என்பவர் இந்த பய உணர்வுகளுக்குரிய மையத்தை தான் கண்டுபிடித்துள்ளதாக கூறியுள்ளார்**


பதகளிப்பு என்பது வருங்காலத்தில் நடக்கவுள்ளது. ஒன்றைப்பற்றி மனதிலே எண்ணம் ஒன்றினை ஏற்படுத்தி அதைப்பற்றி வருத்தப்-பட்டுக் கொண்டிருத்தல் பொதுவாக அது ஏற்படுத்திய எண்ணம் சந்தோசசரமானதாக இருக்காது. இத்தகையவர்கள் அதிகம் தோல்வி மனப்பான்மை உடையவர்கள். எனவே அவர்களது எண்ணம் முற்போக்கானதாக அமைய வாய்ப்பில்லை. இவர்கள் பரீட்சை எடுத்தால், சித்தியடையாவிட்டால் என்ன செய்வது என்பதுபற்றியே எண்ணியவண்ணம் இருப்பார்கள். ஒரு தொழில் பெறுவதற்காக நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றினார்-கள் என வையுங்கள்.

நேர்முகப் பரீட்சை முடிந்த நாள்முதல் அதன் பெறுபேறுகள் கிடைக்கும் வரை எந்த நேரமும் . "சீ" நான் அதை அப்படி சொல்லியிருக்கலாம், பிழை விட்டு விட்டேன் எனப் பிதற்றியபடியே இருப்பார்கள். அச்சக்கோளாறுகள் என்பது மனதிலே தோன்றுகின்ற எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத அதீத பயம். இதனால் ஒருவர் உணர்வு ரீதியாகப் பாதிக்கப்படுகின்றமையால் அவரது அன்றாட வாழ்க்கையும் பெரியளவிலே பாதிக்கப்படும்.

உலகின் யதார்த்த நிலை இவர்களுக்கு சோதனையாக அமை-யலாம். இவர்கள் ஏன் பயப்படுகிறார்கள், எதற்குப்பயப்-படுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளக்கூட கடினமாக இருக்கும். ஒரு தேர்ந்த உளவியலாளர்தான் உண்மையான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியும்.

ஆகவே பயம் என்பது வாழ்க்கை-யை ஓட்டுவதற்கு அவசியமானது அது அதிகரித்தால் வாழ்க்கையை விட்டே ஓடச் செய்து விடும் ■

**- பொ.கனகசபாபதி**



**கைத்(த்)தடி முதியோர் இல்லத்துக்கு நேரடி விசிட்!**

“ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம்.... அம்மாவை வாங்க முடியுமா....?”

“அம்மா என்றழைக்காத உயிரில்லையே.....”

இப்படி ஆயிரம் பாடல்கள் அம்மா, அப்பாவைப் பற்றி உண்டு. தாய் தந்தையரை அப்படி ஒரு உயர்வான இடத்தில் வைத்துப் போற்றுவதுதான் தமிழர் பண்பாடு.



# உறவுகளுக்காய் ஏங்கும் விழிகள்!

ஏ9 வீதி, யாழ் சாலையில் உள்ள கைதடி சாந்தி நிலையத்தில் உள்ள பல தாய் தந்தையர்களுக்கு இந்த உயர்வான ஸ்தானம் ஏனோ அவர்களது பிள்ளைகளால் கிடைத்துவிடவில்லை.

இந்த முதியோர் இல்லத்தில் 173 முதியோர் இருப்பதாகக் கூறிய இல்லத்தின் தலைவர் ந.இராஜலிங்கம், பெரும்பாலோனோர் 60 வயதைத் தாண்டியவர்கள் எனவும் கூறினார்.

“பராமரிப்பு மற்றும் கட்டிட வசதியீனம் காரணமாக இப்போது புதியவர்களைச் சேர்த்துக்கொள்ள முடிவதில்லை” எனத் தற்போதைய நிலைமையைக்-கூறிய அவரிடம், அங்குள்ள முதியவர்கள் பற்றியும், இல்லத்தின் நிலைமை பற்றியும் கேட்டோம்.

குடும்பப் பிரச்சினை, வறுமை, ஆதரிக்க யாருமற்றவர்கள், மனநலக் குறைபாட்டால் கைவிடப்பட்டவர்கள், உறவுகள் புலம்பெயர் நாடுகளில் என நீண்டு செல்லும் பல்வேறு காரணங்களினால் இங்கு முதியவர்கள் அடைக்கலம் புகுந்திருப்பதாக அவர் சொன்னார்.

ஆங்காங்கே தங்கள் பாட்டில் ஏதேதோ செய்து கொண்டிருந்த முதியோர் பக்கம் எம் கண்கள் திரும்ப, அவர்களை நோக்கிச் சென்றோம். ஒவ்வொருவருடைய கண்களிலும் இனம்புரியாத ஒரு ஏக்கமும், வெறுமையான பார்வையுமே தென்பட்டது. மெதுவாக அவர்களிடமும் நாம் பேச்சுக் கொடுத்தோம். முதலில் தயக்கம் காட்டிய அவர்கள் பின்பு தொடர்ச்சியாகப் பேசினார்கள்.

நெற்றியில் விபூதி, சந்தனத் திலகம் அணிந்து தனது சமயத்தை நெற்றியில் காட்டியவராய் இருந்த பாட்டியை முதலில் அணுகினோம். மண்டைதீவைச் சேர்ந்த மாகுலம் (வயது 89) என்ற இந்தப் பாட்டி நீண்ட நாட்களாக எம்முடன் பழகியவர் போன்று “பிள்ளைகள் என்ன செய்கிறீர்கள்?” என்றபடி பேச்சை ஆரம்பித்தார்.

“நான் என்ர ஆறு பிள்ளைகளையும் படிப்பித்து நல்ல நிலைக்கு கொண்டுவந்திட்டன். அவர்களுக்கு ஏம்மா நாங்க சுமையா இருக்கணும் என்று இங்க வந்திட்டன்” என்று அவர் சொன்னபோது மனம் என்னவோ போலிருந்தது.

தம் இன்பதுன்பங்களை யாரிடம் சொல்வது என ஏங்கி வாழும் அங்கிருக்கும் அனைவரும் மன ரீதியாக ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டவர்களாய்த் தான் இருந்தார்கள். அவர்கள் மனக்காயங்களை அன்பால் மட்டுமே ஆற்றமுடியும் என்பதை நாம் புரிந்துகொண்டோம்.

எவர் சோகத்தை எப்படிச் சொல்வது? பலர் தம் கதை கூறினாலும் ஒரு சிலர் ஏதோ ஒரு சோகத்துடன் கூடிய யோசனையில் இருந்தார்கள். “எப்படி இருக்கிறீங்க, சாப்பிட்டீங்களா?” என்று எம் கண்ணுக்குத் தெரிந்த அனைவரிடமும் நாம் கேட்கத் தவறவில்லை.

“ம்...ம்...சாப்பிட்டோம், சோறு கறி தான்” என்று சொன்ன ஒரு வயோதிபரிடம், என்ன கறி என்று கேட்டபோது நினைவற்றவராய் எம்மைப் பார்த்தார். மதியம் சாப்பிட்ட கறி என்ன என்ற ஞாபகம்கூட இல்லாத அளவுக்கு வயதும், சோகமும் அவர்களை மாற்றியிருக்கிறது.

இத்தனை நாளும் வாழ்ந்த வாழ்வு பொய்த்துவிட்டதா என்று மனதினுள் புழுங்கியபடி, உறவுகளால் ஒதுக்கப்பட்ட நிலையில் வாழும் இவர்கள் மனநோயினால்





பாதிக்கப்படுவது ஒன்றும் ஆச்சரியமில்லை. தனியான ஒரு அறையில் தங்களையறியாமல் ஏதேதோ புலம்பியபடி ஒரு சிலரும், வேறு சிலர் இறைவனே கெதியென மந்திரங்களை உச்சரித்தபடியும் இருந்தமை இதனை நிரூபனமாக்கியது.

கால் ஊனமுற்றவர்கள், கண் பார்வையில்லாதவர்கள், வாய் பேசமுடியாதவர்கள் என பல்வேறு உடல் பாதிப்புள்ளவர்கள் இங்கிருந்தாலும், உடல் ஊனத்தைவிட அனைவரையும் வாட்டுவது உளத்தாக்கமாகவே இருப்பதை எம்மால் தெளிவாக உணரமுடிந்தது.

பிரார்த்தனை மண்டபத்தில் பத்திரிகை படித்துக்-கொண்டிருந்த திருநாவுக்கரசு என்ற முதியவருக்கருகில் ஒத்தாசையாக அமர்ந்திருந்தார் நிலையத்தின் வாகனச் சாரதியான சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரன்.

“நான் இங்கு 1982ல் இருந்து பணிபுரிகின்றேன். எமக்கு பொழுதுபோவதே தெரியாது” என்று கூறினார் அவர்.

“நாம் ஒரு நாளைக்கு வராவிட்டால் இவர்கள் மிகவும் கஸ்ரப்படுவார்கள்” என்று எம்முடன் பேசிய இங்கு பணியாற்றும் தாதியொருவர், “அந்தளவுக்கு எமக்கும் இவர்களுக்கும் நெருக்கமான உறவு வளர்ந்துவிட்டது” என்று கண்கலங்கினார்.

**…தாம் இறந்தால் இறுதிக்கிரியை செய்யக் கூட வரமாட்டார்களா என ஏங்கி வாழும் இவர்களைப் புரிந்து கொள்வார்களா?**

இங்குள்ள பணியாளர்கள் அனைவருமே அந்தளவுக்கு முதியோருடன் அன்பாகப் பழகுகின்றனர். “இங்கு 7பேர் பணிபுரிகின்றோம். அனைவருமே ஆர்வத்துடனே பழகுகிறோம்.” என்று சொன்ன பணியாளர் கந்தசாமி, அங்கு அனைவருமே ஒரே குடும்பம் போல் இருப்ப-தாகப் பெருமைப்பட்டார்.

முதியவர்கள் அதிகாலையில் எழும்பி, குளித்து பிரார்த்தனைக்காக பூப்பறித்து, மனசாந்திக்காக வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்காக இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் இல்ல வளாகத்துக்கு உள்ளேயே அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர தினசரிப் பத்திரிகை-கள், வாரமலர்கள் மற்றும் தொலைக்காட்சி பார்ப்பதுடன், பொழுது-போக்காக மீன் வளர்ப்பில் ஆர்வம் காட்டுகின்றனர்.



மிக அமைதியான சூழலில், அன்பான அரவணைப்புடன் இங்குள்ள முதியவர்கள் பராமரிக்கப்படுவது மட்டுமன்றி, சத்துள்ள உணவுகள் நேர ஒழுங்கில் கிரமமாக வழங்கப்படுகிறது. மாதத்தில் ஒரு தடவை வைத்திய பரிசோதனையும் நடைபெறுகின்றது.

ஒவ்வோராண்டும் ஒக்டோபர் 1-7 வரை யாழ் பாடசாலைகளின் முதியோர் தின நிகழ்வுகளும், யாழ் “லயன்ஸ்” கழகத்தினரின் “இனியகீதம்” என்ற நிகழ்வும் தவறாது நடைபெற்று வருகிறது.

இங்கிருக்கும் எட்டு விடுதிகளையும் சமூக சேவைத்திணைக்களத்தினர் நிர்மாணித்து வழங்கி இருக்கின்றார்கள். இருப்பினும் விடுதிகளில் இன்னும் பல வசதிகள் தேவைப்படுவது மட்டுமன்றி, முதியவர்களை வெளியிடங்களுக்குக் கூட்டிச் செல்லக் கூடியவாறு வாகன வசதியும் தேவைப்படுகின்றது.

“முதியோர் குழந்தைகள் போன்றவர்கள்” என்று சொல்வார்கள். ஒரு பச்சிளங்குழந்தை எப்படித் தன் தாய்தந்தையைத் தேடித் தவிக்குமோ, அதுபோல் தம் முதுமைக்காலத்தில் அநாதரவாக வாழும் இவர்கள் பெற்ற பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் நினைவிலேயே வாழ்கிறார்கள்.

என்னதான் அன்பான, ஆதரவான பராமரிப்பு, சிறந்த பணியாளர்கள், அழகான, வசதியான நிலையம் என இருந்தாலும், இங்கு வாழும் அனைத்து முதியவர்களும் ஏங்குவது தம் பிள்ளைகளை, குடும்பங்களைத் தேடியே!

வாழும் காலத்தில் பெற்றோர் செய்த தியாகங்களை மறந்து இது போன்ற இல்லங்களில் இவர்களைச் சேர்க்கும் பிள்ளைகள், தாம் இறந்தால் இறுதிக்கிரியை செய்யக் கூட வரமாட்டார்களா என ஏங்கி வாழும் இவர்களைப் புரிந்து கொள்வார்களா? ■




**அ- அசோபனா**

**2ம் அணி**



# மருந்தில்லா மருத்துவம்



“நீண்ட காலமாக நான் சலரோக நோயினால் அவதிப்பட்டு வந்தேன். ஆங்கில மருத்துவரினால் நான் ஒரு நீரிழிவு நோயாளி என இனங்காணப் பட்டபோதும், மருந்துச் சிகிச்சை ஏனோ எனக்கு பலனளிக்கவில்லை. இந்நிலையில், உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட எனக்கு சுகத்தைத் தந்த வைத்தியம் அக்குபஞ்சர். இன்று நீரிழிவு நோயிலிருந்து முற்றாகக் குணமடைந்து மிகவும் சந்தோசமாக வாழ்கிறேன்”

இவ்வாறு சொல்கிறார், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் கதிர்வீச்சியல் நிபுணர் பிரதூஸ் நாராயணன்.

தனக்கு அக்குபஞ்சர் சிகிச்சையளித்த வைத்தியர் மருத்துவர் க.ரகுராம் என்பவருக்கு அவர் நன்றி சொல்கிறார். இந்த மருந்தில்லா மருத்துவம் பற்றி அவரிடமே விளக்கம் கேட்டோம்.

இந்தியாவில் Dr. ப.ஃஸ்லூன் ரகுமான் என்பவரிடமும், கொழும்பில் Dr.அன்ரன் ஜெயசூரியா என்பவரிடமும் இந்த வைத்தியத்தை முறையாகக் கற்றதாகக் கூறும் Dr.க.ரகுராம், மகிழ்ச்சியுடன் தமது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

“நம் உடம்புக்கான மருந்து வேறெங்குமில்லை, நம் உடம்புக்குள்ளேயே உண்டு. இதுதான் அக்குபஞ்சர் மருத்துவத்தின் சாராம்சம்” என்று கூறியவர், “எந்த ஒரு நோயும் எமக்கு புறச்சூழலில் இருந்து கிடைக்கவில்லை” என்று வாதிடுகிறார்.

“உதாரணமாக, தக்காளி, கத்தரி சாப்பிட்டால் எமது உடலில் ஒவ்வாமை ஏற்படுகிறது என்று சொல்கிறோம். இதற்குக் காரணம் தக்காளியோ, கத்தரியோ இல்லை. பலவீனம் சுவாசப்பையிலேயே உள்ளது. அக்குபஞ்சர் ஊசி மூலம் சுவாசப்பைக்குரிய புள்ளியைத் தூண்டி இதைக் குணப்படுத்த முடியும்” என்று விளக்குகிறார் மருத்துவர் ரகுராம்.

அக்குபஞ்சர் வைத்திய முறைமை பற்றியும், அதற்குப் பயன்படுத்தப்படும் ஊசிகள் பற்றியும் அவர் தந்த விளக்கங்கள் இதோ.

## ‘ஊசி குத்துவதே மருந்து, ஊசியால் குத்தப்படுவதே மருத்துவம்’


**அக்குபஞ்சர் – ACUPUNCTURE**

இயற்கைச் சக்திகள் என்று சொல்லப்படும் பஞ்சபூதங்களோடு இயைந்த ஒரு மருத்துவ முறைதான் அக்குபங்சர். ஓடுபாதைகள், அக்குப்புள்ளிகள், ஊசிகள், அடைப்புகள், தூண்டுதல்கள், நீடிலிங், பிரபஞ்ச உயிர்ச்சக்தி என, ஏனைய மருத்துவ முறைகளிலிருந்து இது வித்தியாசப்படுகிறது.


‘ஊசி குத்துவதே மருந்து, ஊசியால் குத்தப்படுவதே மருத்துவம்’ என்பதாக அமைந்ததுதான் அக்குபஞ்சர். சீன மொழியில் ‘ஷன் சியு’ என்று அறியப்படும் அக்குபஞ்சர், சீன பாரம்பரிய மருத்துவத்தில் ஒரு முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

அக்குபஞ்சர் என்பது இலத்தீன் மொழியில் உள்ள அகுஸ் (ஊசி), பஞ்சேர் (குத்துதல்) என்ற வார்த்தைகளால் உருவான சொல் என்று சொல்லப்படுகிறது. சீன மொழியிலும் ‘ஷன் சியு’ என்றால் ஊசி மருத்துவம் என்றே பொருள்படுகிறது.

உலகின் பழமையான, அதேவேளை பரவலாக பயன்பாட்டில் உள்ள மருத்துவ முறைகளில் ஒன்றான அக்குபஞ்சர், ஆரம்பத்தில்



மருத்துவர் க.ரகுராம்




பொதுவாக வலி நிவாரணம் பெற-வும், அறுவைச் சிகிச்சைக்கான மயக்கநிலை அடையவும் தான் பயன்படுத்தப்பட்டது. தற்போது அக்குபஞ்சரின் முக்கியத்துவம் வருமுன் காத்தல், தடுத்தல் என்ற அம்சங்களில் முன்னணியில் உள்ளது.

“இன்றைக்கு அக்குபஞ்சரின் சிறிய ஊசிமுனைகள் பல்வேறுபட்ட பிரச்-சினைகளை தீர்க்கும் வழிமுறையாக நம்பிக்கையளித்து வருகின்றன. உடல் இளைக்க, உடல் பருமன் குறைக்க, முகப்பொலிவு பெற, புகை பிடிக்கும் பழக்கத்தை கைவிட, உளநல மற்றும் இதர உடல் சார் பிரச்சினைகளை தீர்க்க என ஏராளம் பிரச்சினைகளுக்காக அக்குபஞ்சர் சிகிச்சையை நாடும் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது” என்கிறார் மருத்துவர் ரகுராம்.

அக்குபஞ்சர் ஊசிகள் குறிப்பிட்ட இடங்களில் குத்தப்படும்போது அல்லது சொருகப்படும்போது, சாந்தப்படுத்தும், ஆசுவாசப்படுத்தும், வலி தெரியாமல் இருக்கச்செய்யும், களைப்பாறச் செய்யும் தன்மை கொண்ட என்டார்ஃபின்கள் வெளிப்-படுகின்றன. இது மன அழுத்தம், சலிப்பு, எரிச்சல், பதட்டம் ஆகியவற்றை எதிர்கொள்ள உதவும்.

எவ்விதமான பக்கவிளைவுகளை-யும் ஏற்படுத்தாத இவ்வைத்திய-முறையானது, ஊசியை அடிப்படை-யாக வைத்து ஒவ்வொரு நோய்களு க்கும் தோலின் உட்புறத்தே உள்ள கண்ணுக்கு தெரியாத மிக முக்கிய புள்ளிகளைத் தூண்டுவதன் மூலம் நோயைக் குணப்படுத்துகிறது.

**ஊசியின் மகத்துவம்!**

அக்குபஞ்சருக்கு என்று விசேடமாக தயாரிக்கப்படும் இந்த ஊசிகள் பொதுவாக, 0.5 - 7 அங்குலம் வரையான நீளத்தைக் கொண்டவை.

## மருந்து வேறெங்குமில்லை, நம் உடம்புக்குள்ளேயே உள்ளது.


செப்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களில் தயாரிக்கப்படும் இந்த ஊசிகள், துளைகளற்றவை. இதனால், இரத்தத்தின் மூலம் பரவும் வியாதிகள் பரவ வாய்ப்பில்லை.



**மு.கஜேந்தினி**
**2ம் அணி**

ஆனாலும், ஒருவருக்கு உபயோகிக்கப்படும் ஊசியை அடுத்தவருக்குப் பெரும்பாலும் உபயோகிப்பதில்லை.

“எத்தனை ஊசிகளை இச்சிகிச்சைக்-காக போடுவீர்கள்?” என்ற எமது கேள்விக்குப் பதிலளித்த மருத்துவர் ரகுராம்,



Acupuncture Chart.

“நோய்க்குத் தகுந்தபடி ஊசிகளின் எண்ணிக்கையைக் கூட்டியும் குறைத்தும் உபயோகிப்போம். உதாரணத்துக்கு, தலைவலி, உடல்வலிக்கு 4 ஊசிகள். சாதாரண காய்ச்சல் உள்ள நோயாளிக்கு 3 நாட்களுக்கு சுமார் 7 ஊசிகள் என்றவாறு போடப்படும்” என்றார் அவர். ■



### உங்களுக்கு தெரியுமா?

பெண்களுக்கு, நமது முன்னோர்கள் அக்குபஞ்சர் மருத்துவமுறையை மறைமுகமாக சொல்லிக்கொடுத்தி-ருக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா..?

ஆம், இதோ சில உதாரணங்கள்,

● காதுகளில் தோடு போட்டிருப்-பதால் EAR POINT இயக்கப்படு-கிறது. இது கண்பார்வைக்கு நல்லது.


● மூக்குத்தி அணிவதால், கன்-னங்களில் சுருக்கம் விழாது. முகம் தெளிவாக இருக்கும். மேலும், பெண்களுக்கு உடம்பில் நளினத்-தைக் கொடுக்கும் ஓமோன்களை சீராகச் சுரக்கச் செய்யும்.

● நெத்திச்சுட்டி அணியும்போது நடுமண்டையிலிருக்கும் புள்ளிகள் தூண்டப்படுகிறது. இது உடம்பில் உள்ள எல்லா பாகங்களுக்கும் நல்லது.


● பெண்கள் கைவிரலால் அழுந்தத் தேய்த்து பொட்டு வைப்-பதால், நெற்றிக்கு கொஞ்சம் கீழே, இரண்டு புருவங்களுக்கு மத்தியிலிருக்கும் புள்ளி தூண்டப்-படுகிறது. இதனால் ஞாபகசக்தி அதிகமாகும், சுருக்கங்கள் விழுவது குறையும்.

● காற்சங்கிலி அணிவதால், அணிபவரின் சிறுநீரகம் நல்லமுறையில் இயங்க உறுதுணையளிக்கும்.

மூதாதையரின் மருத்துவத்துடன் இணைந்த இவ்வாறான சம்பிரதா-யங்களை இன்று நாம் நாகரிகம் என்ற போர்வைக்குள் மறைக்க முயற்சிக்கிறோம். தெரிந்து கொண்ட பின்னராவது இவற்றை நாம் பின்பற்ற வேண்டாமா?



# கடல்வளம் எதிர்கொள்ளும் சவால்கள்!



இயற்கையின் கொடைகளில் யாழ் மாவட்டத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் கடல்வளம். ஏறத்தாள, எல்லாப் பக்கங்களுமே கடலால் சூழப்பட்ட குடாநாட்டுக்கு கடல்வளம் மிகப்பெரும் பொருளாதார பலமும்கூட.

கிளிநொச்சியைக் கடந்து ஆனையிறவு ஊடாக யாழ் குடாநாட்டுக்குள் நுழைந்தால், ஒருபுறம் கிளாலி, கச்சாய் கடற்பரப்புக்கள் முதல் அப்படியே கேரதீவு, தனங்கிளப்பு, அரியாலை கிழக்கு, குருநகர், நாவாந்துறை வரையிலும், அப்பாலுள்ள தீவுகளும் என கடல்வளம் மண்டிக் கிடக்கிறது.

மற்றொருபுறம் மருதங்கேணி, செம்பியன்பற்று, நாகர்கோவில், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு என நீண்டு செல்லும் கடற்பரப்பு, மயிலிட்டி, மாதகல் வரையில் விரிந்து கிடக்கிறது.

கரையோரக் கட்டமைப்புக்களான உவர் நீரேரிகள், கழிமுகங்கள், சதுப்பு நிலங்கள், கண்டல் தாவரங்கள், கண்டத்திட்டுகள் என்று பல விதமான கடற்தாவரங்களுடன் கூடிய வளங்கள் குடாநாட்டில் நிறைந்து காணப்-படுகின்றன.

இவ்வாறு, கடலும், கடல்சார் வளங்களும் நிறைந்துள்ள யாழ் குடாநாட்டில் சிறந்த தொழிற்துறையாக வளர்ச்சி கண்டுள்ள மீன்பிடித்துறை, குடாநாட்டுக்கு மட்டுமன்றி, வட மாகாணத்தின் பொருளாதாரத்துக்கே வலுச்சேர்ப்பதாக உள்ளது. நாட்டில் குழப்பச் சூழ்நிலைகள் தோன்றமுன் முழு இலங்கையினதும் மீன் உற்பத்தியில் 50 சதவீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை யாழ் குடாநாடு செய்திருந்தது.

அமைதிச் சூழல் திரும்பியிருக்கும் நிலையில் குடாநாட்டின் மீன்பிடித்துறை இப்போது மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறது. எனினும், கடலும், கடல் சார்ந்த இடங்களிலும் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் எதிர்காலத்தில் குடாநாட்டின் மீன்பிடித்துறை வளர்ச்சிக்குச் சவாலாகி விடுமோ என்ற அச்சநிலை தோன்றியுள்ளது.




தடைசெய்யப்பட்ட வலைகள், டைனமைற் வெடி, றோலர் படகுகள் என்பன கடல்வள அழிவுக்கு பிரதான காரணங்களாக இருந்து வருகின்றன.

எமது நாட்டுச் சட்டத்தின்படி வெடிக்கும் தன்மையுள்ள, உணர்வு இழக்கச் செய்யும் தன்மையுள்ள பொருள்களைக் கடலில் பாவித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. தங்கூசி வலை, தள்ளு வலை, சூழ் வலை, மெக்சி வலை, வலி வலை, நாய் வலை, முக்கூட்டு வலை, லைலா வலை, சுரக்கி வலை என்பவற்றைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**டைனமெற்றினால் கோடிக்கணக்கான மீன் முட்டைகள், சிறிய மீன் வகைகள் அழிவடைகின்றன**

ஆனால், இன்றைய அமைதிச் சூழலில் 'எந்நேரமும், ஆழ்கடலிலும் மீன்பிடிக்கலாம் என்ற நிலை இருப்பதால், பலர் சட்டத்துக்கு முரணான தொழில்முறைகளைக் கையாள்கிறார்கள்.

இதன் விளைவாக, கடலில் உள்ள மிகச் சிறிய உயிரினங்கள் அழிவடைந்து வருவதுடன், வெடிபொருள் பயன்பாட்டால் தாவரங்கள், கற்பாறைகள், பவளப் பாறைகள், நீர்வளம் என்பன சிதைவடைந்து அழிவுக்-குள்ளாகின்றன. குறிப்பாக, டைனமெற்றினால் கோடிக்-கணக்கான மீன் முட்டைகள், சிறிய மீன் வகைகள் அழிவடைகின்றன.



இந்தப் பாதிப்புக்களின் உண்மை நிலை என்ன, இதனை எவ்வாறு தடுக்கலாம் என்று, குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் யூ.சகாயராஜா அவர்களிடம் கேட்டோம்.

"யுத்த காலத்தில் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்ல பெரும் சிரமத்தை எதிர்நோக்கினார்கள். சில குறிப்பிட்ட எல்லைகளிலும், குறிப்பிட்ட நேரத்திலும் மட்டுமே தொழிலில் ஈடுபட அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான சூழலில் சட்ட வரைமுறைகளை எவருமே முழுமையாக கடைப்பிடிக்க

**"உள்ளூர் மீனவர்களை மட்டும் இதில் பழிசுமத்துவது தவறு. இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளே குடாநாட்டுக் கடல் வளத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றன"**

மறுக்கிறார்கள். மீண்டும் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளான "டைனமெற்" மற்றும் இழுவலை, தங்கூசி வலை போன்ற சட்டவிரோத தொழில்முறைகளைப் பின்பற்றுகிறார்கள். அத்துடன், "ரோலர்" எனப்படும் கலன் மூலம் மீன்பிடியில் அநேகமானவர்கள் ஈடுபடுகின்றனர்" என்றார் அவர்.



மேலும், சில கடல்வாழ் உயிரினங்களான கடல் அட்டைகள் (குறிப்பிட்ட விட்டத்தின் அளவுக்குக் கூடியவை), கடல் ஆமை, கடல் பாலூட்டிகள், 70 மில்லிமீற்றர் விட்டத்திலும் குறைவான கடல் சங்கு, சிங்க இறால்(குறிப்பிட்ட விட்டத்தின் அளவுக்குக் கூடியவை), பீளிகள் அகற்றப்பட்ட சுறா, திருக்கை போன்ற கடல்வாழ் உயிரினங்கள் பிடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி தடை செய்யப்பட்ட மீனினங்களை தம் சுயநல நோக்கிற்காக போட்டிபோட்டு சிலர் சூறையாடுவதாக அவர் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் சின்னையா தவரட்ணம் என்பவரிடம் இது பற்றிக் கேட்டோம்.

"உள்ளூர் மீனவர்களை மட்டும் இதில் பழிசுமத்துவது தவறு. இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடு-களே குடாநாட்டுக் கடல் வளத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றன. இந்திய மீனவர்களே அதிகம் இவ்வாறான தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளைப் பின்பற்றுவதும், கடல்வாழ் உயிரினங்களைச் சூறையா-டுவதும் அதிகம். இவர்களது இவ்வாறான செயற்பாட்டைத் தடுப்பதற்கு எமக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை" என்றார் அவர்.



சி.தவரட்ணம்

சட்டவிரோதமாக கடல் வாழ் உயிரினங்களுக்கு அழிவை ஏற்படுத்தும் தொழில்முறைகள் பற்றி பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி-களின் கவனத்திற்கு கொண்டுவரப்-பட்டவேளை, டிசம்பர் 31ம் திகதியிலிருந்து இதற்கான தடைச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்ற தகவலையும் அவர் தெரிவித்தார்.


சட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டாலும், அதைக் கண்காணிப்பதும் அவசியம். கடல்வளம் என்பது பொதுச்சொத்து. இதைப் பேணவேண்டியது அனைவரதும் பொறுப்பு.

சிறந்த வருமானமுள்ள தொழிற்துறைக்காக கிடைத்து உள்ள சந்தர்ப்பத்தை வீணாக்காமல், சுயநலப்போக்கு இன்றி பொதுநலமாக சிந்தித்தால் எம் கடல்வளத்தை நாம் பாதுகாக்கலாம்.■



**- ச.தர்ஷா**

**2ம் அணி**



# வடமராட்சியின் வர்த்தக நகர்

"முன்னரெல்லாம் ரீவி வாங்கிறதெண்டால் யாழ்ப்பாண ரவுனில வாங்கி ஆட்டோ பிடிச்சுக் கொண்டுவர வேணும். ஆனா இப்ப ரவுண் விலையிலும் குறைஞ்ச விலையில நெல்லியடி ரவுனில வாங்கிறம்"

நீண்ட காலத்துக்குப் பின்னர் நெல்லியடிக்குச் சென்ற எனக்கு, நெல்லியடி நகரின் திடீர் வளர்ச்சி பிரமிக்க வைத்தது. எப்படி இவ்வளவு விரைவில் இந்த வளர்ச்சி என்று அருகிலிருந்த ஒருவரிடம் பேச்சுக்கொடுத்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நெல்லியடியின் பிரதான வீதி அகலப்படுத்தப்பட்டுப் பிரமிப்புடன் பார்க்க வைக்கிறது. இவ்வீதியால் செல்வதற்கென்றே ஒரு தடவை பருத்தித்துறைக்குச் சென்று வரலாம்.

30 வருடங்களுக்குப் பின்னர் இப்போதான் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்துள்ள யாழ்ப்பாணத்தில், வீதி அகலிப்புப் பணிகள் பிரதானமானதாக உள்ளது. திடீரெனப் பெருகியிருக்கும் வாகனப் போக்குவரத்தைச் சமாளிக்க வீதிகள் அகலப்படுத்தப்படவேண்டியது மிக அவசியமாக உள்ளது.

இந்த வீதி அகலிப்புப் பணிகளில் முந்திக்கொண்டு சாதித்திருப்பது வடமராட்சி மண்தான். அதிலும் குறிப்பாக நெல்லியடி நகரை அண்டிய பிரதேசங்களில் வீதி அகலிப்புப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுவதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

தெற்கில்கூட இவ்வாறு வீதி அகலிப்புப் பணிகளுக்கு மக்கள் ஒத்துழைப்புத் தந்ததில்லை என்று வீதிக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தென்னிலங்கை பொறியியலாளர்கள் வியந்து



பாராட்டியதாக நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் மு.சுந்தரலிங்கம் கூறினார்.

வடமராட்சியின் வர்த்தக நகராக வளர்ச்சி கண்டுள்ள நெல்லியடியில், அனேமாக யாழ் நகரிலுள்ள அனைத்து வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தென் பகுதி வர்த்தக நிறுவனங்களின் கிளைகளும் உள்ளன. அந்த வகையில் யாழ் நகருக்கு அடுத்தபடியாக நெல்லியடி நகர் மாவட்டத்திலேயே முன்னணியில் நிற்கிறது எனலாம்.


புதிய, அகன்ற வீதிகளுடன் கம்பீரமாய்க் காட்சிதரும் நெல்லியடி நகரின் அழகுக்கு அங்குள்ள வர்த்தக நிலையங்கள் மெருகூட்டுகின்றன.

நகரின் பிரதான வீதியில் பிரமாண்டமாய் காட்சியளித்தது அங்குள்ள திருமகள் நெல்லை சில்க்ஸ். மிகப் பிரமாண்டமான புடைவைக்கடை, முற்றிலும் குளிரூட்டப்பட்டு அனைத்து விதமான ஆடைகளையும் கொண்டுள்ளது. இதுதவிர, கலைவாணி ரெக்ஸ், இரட்ணம் ரெக்ஸ், பூம்புகார் ரெக்ஸ்ரைல்ஸ் மற்றும் யசோ ரெக்ஸ் போன்ற கடைகளும் உள்ளன.

சிறந்த தரத்திலான, உத்தரவாதமான நகைகளுக்கு கொடிகாமம் வீதியில் பல கடைகள் உள்ளன. எங்குமே காணமுடியாத அரிய வகை வலம்புரிச் சங்குகள் இரண்டை முன்னே காட்சிப்படுத்தி எம்மை ஈர்த்தது டுர்ஜா நகைப்பூங்கா. இதுதவிர, ஸ்ரீகாமாட்சி நகைமாடம், அம்பிகை நகைமாடம், சரவணா நகைமாடம் மற்றும் மத்திய மகா வித்தியாலய வீதியிலுள்ள நகைக் கடைகள் பலவும் நெல்லியடி நகருக்கு அழகு சேர்க்கின்றன.

கணினி மற்றும் கணினிசார் உபகரணங்களை பிரதான வீதியில் PC House, மத்திய மகாவித்தியாலய வீதியிலுள்ள PC Solutions





Technologies, Micro PC Systems, Tknel Computer and Technologies என்பன வழங்கி வருகின்றன.

வீட்டு மின்சார உபகரணங்களுக்காக கொடிகாமம் வீதியிலுள்ள வர்ஷன் எலக்ரோனிக்ஸ், பிரதான வீதியிலுள்ள தமிழ்ப் பூங்கா எலக்ரிக்கல்ஸ், மரியா றேடர்ஸ் என்பவற்றுடன், அபான்ஸ், சிங்கர் பிளஸ் காட்சியறைகளும் இங்கே உள்ளன.

மோட்டார் வாகனங்களை நீங்கள் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான பல விற்பனை நிலையங்கள் உள்ளன. குறிப்பாக, டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும், பஜாஜ் வாகனங்களைக் கொண்டதுமான




அபி மோட்டோர்ஸ். இதுதவிர, பருத்தித்துறை வீதியில் HERO HONDA விற்பனை முகவர் நிலையம் RGT Traders அமைந்துள்ளது. மோட்டார் வாகன உதிரிப்பாகங்களுக்கென பிரதான வீதியில் பராக்கோ மோட்டோர்ஸ், ஜெனா மோட்டோர்ஸ், கணேசன் மோட்டோர்ஸ், லிபேட்டி மோட்டார் ஹவுஸ் என்பனவும் அமைந்துள்ளன.

நாவிற்கு சுவையூட்டும் உணவுகளை எவரெஸ்ற் குடும்ப உணவகத்துடன், கொடிகாமம் வீதியிலுள்ள நியூ கிருஸ்ணா கிறீம் ஹவுஸிலும், அறுசுவை உணவுகள், கேக் வகைகள், பிஸ்கட் வகைகள், குளிர்பானங்கள், சொக்லட் வகைகள் என்பவற்றிற்கு பிரதான வீதியிலுள்ள சுபாஸ் உணவகத்துக்குச் செல்லலாம்.

நவீன கைத்தொலைபேசிகளைப் பெற்றுக்கொள்ள கொடிகாமம் வீதியிலுள்ள விபூசனா என்ரப் பிறைஸ் உள்ளது. இங்கு அனைத்து வகையான கைத்தொலைபேசிகள் மற்றும் உதிரிப்பாகங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், காலணிகளுக்கென பிரதான வீதியிலுள்ள DSI முகவர் நிலையம், நெல்லியடிச் சந்தியிலுள்ள SRI Shoe Palace போன்ற சில கடைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள சிதம்பரப்பிள்ளை புத்தகச்சோலை கூடவே பருத்தித்துறை வீதியிலுள்ள டோரா என்ரப்பிறைசஸ், அருள்நாயகி புத்தகசாலை என்பன காணப்படுகின்றன.

அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள பிரதான வீதியில் துஷானி அழகு மாடம், மங்கை அழகு மாடம், அம்மு மற்றும் கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம், சந்துஜன் அழகுச்சோலை போன்ற கடைகள் உள்ளன.


மருந்தகங்களாக நெல்லியடி மெடிக்கல்ஸ், மாதுஜன் மெடிக்கல்ஸ், ஸ்ரீமுருகன் மெடிக்கல்ஸ் போன்றனவும், திரைப்படம் மற்றும் பாடல் ஒலி, ஒளி இறுவட்டுக்களுக்கென பருத்தித்துறையில் அமைந்துள்ள டினோ சென்ரர் என்பன உள்ளன.

இவ்வாறு அனைத்துத் தேவைகளுக்குமான பொருள்கள் மற்றும் சேவைகளை திறம்படக் கொண்ட கடைகள் மற்றும் நிறுவனங்களுடன் காட்சியளிக்கும் இந்நகரின் வளர்ச்சி வடமராட்சி வாழ் மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமே!




**- ஜெ.பாலகுமார்**

**2ம் அணி**







# முகம் பொலிவு பெற

அலுவலகம் சென்று வரும் பெண்களுக்கு தமது முகத்தின் அழகைக் கவனிக்க நேரம் கிடைப்பதில்லை. அழகு நிலையம் செல்லவும் நேரமிருக்காது. ஆனால், வசீகரமான முகத்தைப் பெற ஆசையுண்டல்லவா? உங்களுக்காவே சில இலகுவான இயற்கை வழிமுறைகள் இவை… முயன்று பாருங்கள்…

**மென்மையான மிருதுவான முகத்துக்கு…**

உங்கள் முகம் பொலிவற்றதாகவும் வயது முதிர்ந்த மாதிரியான தோற்றத்தையும் காட்டுகிறதா? கவலையை விடுங்கள்…

பச்சைப் பயறு, கடலை, கஸ்தூரி மஞ்சள், மூன்றையும் சேர்த்து மிருதுவாக அரைத்தெடுத்து, சிறிது பசும்பால் சேர்த்துக் கலவை (Pack) செய்து உங்கள் முகத்தில் பூசுங்கள். 20 நிமிடங்களின் பின்னர் குளிர்ந்த நீரினால் முகத்தைக் கழுவுங்கள். தொடர்ச்சியாக வாரத்திற்கு 2 - 3 தடவை என ஒரு மாதத்துக்குச் செய்துவர, மார்ச் 'சிகரம் தொடு' பார்க்கும்போது உங்கள் முகம் பொலிவாக மாறியிருப்பதை நீங்களே உணர்வீர்கள்…

**உதடுகள் சிவப்பு நிறமாக…**

உதட்டுச் சாயங்கள் பூசுவதா-லும், வெயில் காலநிலையாலும் உதடுகள் கறுப்பாகவும், வறட்சியா-னதாகவும் மாறுகிறதே என்ற கவலையா…?

பீற்றூட் கிழங்கை கிரேப் செய்து வரும் துருவல்களை இரவு படுக்கும் முன் உதட்டின் மேல் வைத்து 30 நிமிடங்களின் பின்னர் கழுவி விடுங்கள். தினமும் இவ்வாறு செய்துவர ஓரிரு வாரங்களில் உதட்டின் நிறம் மாறுவதைக் காணபீர்கள்.

**கண்ணுக்கு மையழகு… கருவளையமிருந்தால்?**

கண்ணில் கருவளையமிருப்பது என்பது பலரது பிரச்சினை…தொடர்ச்சியாக மூக்குக் கண்ணாடி பாவிப்போர், கணினி முன்னால் பணியாற்றுவோருக்கே இப்பிரச்சினை அதிகளவில் ஏற்படும்.

வெள்ளரிக்காய் அல்லது உருளைக்கிழங்கை வட்ட வடிவில் மெல்லியதாய் வெட்டி கண்ணின் மேல் ஒற்றி வையுங்கள்…20நிமிடங்களின் பின்னர் அதனை எடுத்து கண்ணைக் குளிர்ந்த நீரினால் கழுவுங்கள்…ஓரிரு கிழமைக்குள் மாற்றம் கிடைக்கும்.

கண் இமைகள் மற்றும் புருவம் அழகாகவும் அடர்த்தியாகவும் இருக்க,

தினமும் இரவில், கண் இமைகளிலும் புருவத்தி-லும் விளக்கெண்ணை தடவி விடுங்கள்.

தினமும் இவ்வாறு செய்து வர மாற்றம் கிடைக்-கும். கண்ணில் வெப்பத்தை இது குறைப்பதாலும் கண் குளிர்ச்சியாக இருப்பதை உணர்வீர்கள்.

**பாத வெடிப்பா?**

சில பெண்களுக்கு உடலிலுள்ள நீர் (வியர்வை) வெளியேறுவது குறைவாக இருப்பதனாலேயே பாதவெடிப்புகள் பொதுவாக ஏற்படுகிறது. உங்கள் பாதங்களை வைக்கக்கூடிய ஒரு பாத்திரத்தினை எடுங்கள். அதனுள் இளஞ்சூடான சுடுநீர், சிறிதளவு உப்பு மற்றும் தேசிக்காய்ச் சாறு மூன்றையும் கலந்து, பாதங்களை அந்த நீரினுள் அமிழ்த்தி வையுங்கள். 20-30 நிமிடங்களின் பின்னர் பாதங்களை வெளியே எடுத்து நன்றாக துடைத்துவிட்டு Foot Cream ஒன்றை பூசி மசாஜ் செய்யுங்கள்.

இவ்வாறு தினமும் செய்து வர, உங்கள் பாதவெடிப்பு இல்லா-மல் போவதுடன், அழகான, மிருதுவான பாதங்களை நீங்கள் பெறுவீர்கள்…

முயன்று பாருங்கள்… உங்கள் குறைக-ளுக்கு ஒரு Bye! சொல்லிவிடலாம். ■



த.சுமித்தி
2ம் அணி






இளமைக்கு மெருகூட்டும் கண்கவர்
22 கரட் தங்க நகைகளுக்கு
டுர்ஜா நகைப்பூங்கா
DURJA NAGAI POONGA
அதி நவீன சிங்கப்பூர் டிசைன்களை
சிறந்த தரத்தில் - குறுகிய காலத்தில்
ஓடருக்கு பெற்றுக்கொள்ள நாடுங்கள்
கொடிகாமம் வீதி, நெல்லியடி
தொ.பே.இல.: 0779525392




அனைத்துவிதமான கணினி வகைகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான
நவீன காட்சியறை மற்றும் சேவைநிலையம்
Tknel Computers & Technology
Computer Repair & Maintenance...
Networking...
Software Installation...
குறைந்த கட்டணத்தில் - விரைவான நிறைவான
உத்தரவாதமான சேவைகள்
இல. 364, 365, கொடிகாமம் வீதி, நெல்லியடி.
மின்னஞ்சல்: Tknel@sltnet.lk
தொ.பே.இல: 021 2262526




மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள்
பயிற்சிப் புத்தகங்கள் பாடசாலை உபகரணங்கள்
மற்றும் அலுவலக காகிதாதிகள்,
உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள
சிதம்பரப்பிள்ளை
புத்தகச்சோலை
இல. 60, 64, பிரதானவீதி, நெல்லியடி,
தொ.பே.இல: 021 2263223

நவீன மொபைல் போன்கள் மற்றும் உதிரிப்பாகங்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளவும்
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்
நாடவேண்டிய ஒரே இடம்
VIPOOSHANA ENTERPRISES
கொடிகாமம் வீதி, நெல்லியடி
தொ.பே.இல.: 0772487362


வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
உடுவில் மகளிர் கல்லூரி
மானிப்பாய் இந்துக் கல்லூரி
ஸ்கந்தவரோதயா கல்லூரி
வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
WWW JAFFNA TODAY COM
Northern SriLanka News & Views